Registered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு
விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்


வெலா சலூன்
WELLA
Wella Hair Dressing
(குளிரூட்டப்பட்டது)
Haircuts, Facials, Stranghting
சலூனுக்கு தேவையான உபகரணங்கள்
விற்பனைக்குண்டு.

இல,08, பருத்தித்துறை வீதி,
நல்லூர் மாக்கற்,
கல்வியங்காடு. T.P 0773144965

ர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஆடி- 16 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ஐ-ஆகிர் 24 (01.08.2005) திங்கட்கிழமை இதழ்:305

துரித புனரமைப்புக்காக

## பலாலி விமான நிலையம் 4 மாதங்கள் மூடப்படும்!

கொழும்பு —

பலாலி ஓடுபாதை புனரமைப்பு நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்வதற்கு வசதியாக - பலாலி ஊடான விமானசேவைகள் சுமார் நான்கு மாதங்கள் தடைப்படும் என்று விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் டொனால்ட் பெரேரா தெரிவித்தார்.

பலாலி விமான ஓடுபாதை புனரமைப்புப் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. புனரமைப்புப் பணிகள் ஒருங்கிணைக்கப்பட்ட பின்னர் பலாலி விமானத்தளத்தில் விமானங்கள் தரையிறங்குவது நிறுத்தப்படும்.

புனரமைப்புப் பணிகள் முடிவடையும்வரை விமானங்கள் தரையிறங்க அனுமதிக்கப்படமாட்டாது. இதனால் தனியார் பயணிகள் விமானசேவையும் தடைப்படும்.

பலாலி விமான ஓடுபாதையில் விமானங்கள் தரையிறங்கும்போது

(12 ஆம் பக்கம் பார்க்க)

'நமது ஈழநாடு' நடத்திய

## புலமைப்பரிசில் கருத்தரங்குகளில் 5 ஆயிரம் மாணவர்கள் பங்கேற்பு!

யாழ்ப்பாணம் —

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களின் நன்மை கருதி 'நமது ஈழநாடு' கடந்த இரு நாட்களாக நடத்திய கருத்தரங்கில் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றுள்ளனர்.

இந்த வருடம் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை எழுதவுள்ள பாடசாலை மாணவர்களின் கல்வி நிலையை உயர்த்தும் நோக்குடன் பிரபல ஆசிரியர்களான அம்பிகைபாகன், புண்ணியமூர்த்தி, அன்பழகன் ஆகியோரால் மேற்படி புலமைப்பரிசில் கருத்தரங்குகளும், எழுத்துப் பரீட்சையும் (12 ஆம் பக்கம் பார்க்க)



# போர்நிறுத்த உடன்பாடு மீளாய்வு; அரசு மட்டும் கோரினால் போதாது!

## கண்காணிப்புக்குழு பேச்சாளர் கைவிரிப்பு

கொழும்பு —

போர்நிறுத்த உடன்பாட்டில் மாற்றம் செய்வது தொடர்பாக - அரசாங்கத் தரப்பிலிருந்து மட்டும் வேண்டுகோள் விடுக்கப்பட்டால் போதாது - விடுதலைப் புலிகளும் இதுகுறித்து கோரிக்கை விடுத்தாலன்றி, போர்நிறுத்த உடன்பாட்டில் மாற்றம் செய்வது குறித்து தாம் எவ்வித கவனமும் செலுத்தப் போவதில்லை என போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு கருத்துத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஹெலன் ஓலப்ஸ் டோட்ரயர் கருத்துத் தெரிவிக்கையில் -

கிழக்கில் பாதுகாப்பு நிலைமை மோசமடைந்து வருவதை அடுத்து விடுதலைப் புலிகளுடனான போர்நிறுத்த உடன்படிக்கையில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்திருந்த கருத்துத் தொடர்பாகவே கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் இவ்வாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுடன் உயர்மட்டப் பேச்சுக்களை நடத்தி, போர்நிறுத்த உடன்படிக்கையில் திருத்தங்களைக் கொண்டு வருவதன் மூலம் பாதுகாப்பு நிலவரங்களை சீராக்குவதுடன் இரு சாராருக்கும் இடையே நம்பிக்கையைக் கட்டியெழுப்ப முடியுமாக இருக்கும் என சமாதான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும். நாடுகளின் பிரதிநிதிகளை கடந்த வாரம் (12 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளின் பதிலுக்கு கண்காணிப்புக்குழு காத்திருப்பு!

கொழும்பு —

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் விடுதலைப் புலிகளின் போராளிகளுக்குப் பாதுகாப்பு வழங்குவது தொடர்பாக - அரசாங்கம் சமர்ப்பித்த புதிய யோசனைகள் தொடர்பான புலிகளின் பதிலைத் தாம் எதிர்பார்த்திருப்பதாக - போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

பாதுகாப்புச் செயலாளர் அசோக ஜயவர்த்தனவின் தலைமையில் கடந்த வாரம் முப்படைகளின் தளபதிகள் மற்றும் சமாதான செயலகத்தின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட கூட்டத்தில் சில புதிய யோசனைகள் தயாரிக்கப்பட்டு புலிகளிடம் சமர்ப்பிப்பதற்காக கண்காணிப்புக்குழுவிடம் கையளிக் கப்பட்டது.

மறுநாளான 27 ஆம் திகதி புதிய யோசனைகளை கண்காணிப்புக்குழு கிளிநொச்சிக்கு அனுப்பியது. எனினும், இதுவரை புலிகளிடமிருந்து எதுவித பதிலும் கிடைக்கவில்லை.

புதிய யோசனைகளில் பாதுகாப்பு அதிகரிப்பு மற்றும் உத்தரவாதமளித்தல் ஆகிய விடயங்கள் அடங்கியுள்ளதாகவும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளின் போராளிகளுக்கு பாதுகாப்பு வழங்க சந்திரிகா உத்தரவு!

### கொழும்பு வார இதழ் தெரிவிப்பு

கொழும்பு —

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வரும் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கான முழுமையான பாதுகாப்பை வழங்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க படையினருக்கு உத்தரவிட்டிருப்பதாகவும் -

இந்த உத்தரவுக்கு அமையவே படையினர் கடந்த 23 ஆம் திகதி திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலனுக்கு பூரண பாதுகாப்பை வழங்கியிருந்ததாகவும் கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு வரும் விடுதலைப் புலிகளுக்கு பாதுகாப்பு வழங்குவது தொடர்பாக இக்கட்டான ஒரு நிலை ஏற்பட்டுள்ள சூழ்நிலையிலேயே யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு இவ்வாறானதொரு ஏற்பாட்டைச் செய்திருந்தது.

கிளிநொச்சியிலிருந்து மட்டக்களப்பிற்கும், கிளிநொச்சியிலிருந்து (12 ஆம் பக்கம் பார்க்க)

## தனியார்துறை ஊழியர்களுக்கு அடுத்த மாதம் சம்பள உயர்வு!

கொழும்பு —

தனியார் துறைகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கு அடுத்த மாதம் முதல் ஆயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளதாக தொழில் அமைச்சின் செயலாளர் மகிந்த மதிகவேருவா தெரிவித்தார்.

கடந்த வரவு - செலவு திட்டப் பிரேரணையின் போது தனியார்துறை ஊழியர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பை வழங்கவேண்டுமெனக் கோரி முன்வைத்த இந்தத் திட்டத்தை கடந்த மாதம் அமைச்சரவை அங்கீகாரம் வழங் கியது.

இந்தச் சம்பள அதிகரிப்பின் மூலம் நாட்டிலுள்ள தனியார் துறைகளில் பணியாற்றும் எழுபது லட்சம் ஊழியர் கள் நன்மை அடைவர் எனத் தெரிவிக் கப்புடுகிறது.

## முல்லைத்தீவு அரச அதிபர் கைதானதாக தென்பகுதி ஊடகங்கள் பொய்ப்பிரசாரம்!

கொழும்பு —

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் கொழும்பில் செத்சிறிபாயவில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி நீர்முகாமைத்துவ அமைச்சுக் கட்டடங்களை வீடியோப் படம் எடுத்ததால் தலங்கம பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாக தென்னிலங்கை ஊடகங்கள் விசமத்தனமான பிரசாரத்தில் நேற்று ஈடுபட்டன.

இந்த விடயம் குறித்து முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமாரிடம் கேட்டபோது-

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள துணுக்காய் வலய பிரதேச செயலருக்கு, பிரதம செயலாளரால் வாகனம் ஒன்று வழங்கப்பட்டது. அதற்கு நிரந்தர சாரதியாக இதுவரை யாரும் நியமிக்கப்படாமையால் துணுக்காய் பிரதேச செயலர் நந்தகுமார் தற்காலிக சாரதிஒருவரை வாடகைக்கு அமர்த்தி மேற்படி வாகனத்தை கொழும்புக்குக் கொண்டு சென்றார்.

அந்தச் சாரதி செத்சிறிபாயவில் அமைந்துள்ள அமைச்சுக் கட்டடங்கள் சிலவற்றை படம் பிடித்ததாகக் கூறி தலங்கம பொலிஸார் மேற்படி சாரதியைக் கைது செய்தனர். இந்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

மேலதிக விபரங்களை இன்று தான் அறிய முடியும். நான் வீடியோபடம் எடுத்ததாகவும், என்னைப் பொலிஸார் கைது செய்ததாகவும் வெளியான தகவல் பொய்யானது என அவர் மேலும் தெரிவித்தார்.

## பஸ்கள் மோதிக்கொண்டதில் 16 பயணிகளுக்குக் காயம்!

வவுனியா —

வவுனியா - நெழுக்குளம் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் 16 பேர் காயமடைந்து வவுனியா பொதுவைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா மக்கள் மயப்படுத்தப்பட்ட நிறுவனத்திற்குச் சொந்தமான பஸ் ஒன்று - தரிப்பிடத்தில் நின்று பயணிகளை இறக்கியபோது, மன்னார் மக்கள் மயப்படுத்தப்பட்ட நிறுவனத்திற்கு சொந்தமான பஸ் அதன் பின்னால் மோதியது.

இந்த விபத்தில் இரண்டு பஸ்களிலும் இருந்த பயணிகளில் 16 பேர் காயமடைந்து வவுனியா பொதுவைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (12 ஆம் பக்கம் பார்க்க)


ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
EXPOAIR
021-2223891, 2226297, 077-2349999, 011-2372952/3, 011-2360290/1
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
Your friend in the skies...
இலங்கையில்
முன்னணி வகிக்கும்
உங்கள் உள்ளூர்
விமான சேவை...


## கடமை நேரத்தில் அரச மருத்துவர்கள்

# தனியார் மருத்துவமனைகளுக்கு செல்வதை தவிர்க்குமாறு சுகாதாரசேவை வேண்டுகோள்!

யாழ்ப்பாணம்—

பொது மருத்துவமனைகளுக்கு பாதிக்கப்பட்ட மக்களும், வறிய மக்களுமே சிகிச்சை பெறுவதற்கு வருகின்றனர். இவர்களைப் புறந்தள்ளிவிட்டு தனியார் சிகிச்சை நிலையங்களுக்கு கடமை நேரத்தில் சேவையாற்றச் செல்லுதல் தவிர்க்கப்படவேண்டும். மருத்துவ நிலையங்களில் ஏற்படும் குறைபாடுகளுக்கு நிலையத்தை இயக்கும் உரிமையாளர்கள் பொறுப்பு அல்ல. மருத்துவர்களே பொறுப்பாளிகளாகின்றனர்.

தனியார் ஆங்கில மருத்துவ சேவையாளர்களுக்கான கலந்துரையாடல் கடந்த 17 ஆம் திகதி யாழ்ப்பாண சித்த மருத்துவக் கல்லூரியில் நடைபெற்றபோது தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் ச.விக்கிமைன் இவ்வாறு தெரிவித்தார்.

இதில் பொது மருத்துவ சேவை, நிபுணத்துவ சேவை, பற்சிகிச்சை, தோல் சிகிச்சை, ஆய்வுகூட சேவை செய்வோர் எனப் பலரும் பங்குபற்றினர். கலந்துரையாடலில் பங்குகொண்டோர். இங்குள்ள ஆய்வுகூட சேவையில் நம்பகத் தன்மையற்றுப்போவதாகத் தெரிவித்தனர். அதேவேளை - பல நிலையங்கள் நிபுணத்துவ சேவை வழங்கும்போது மக்களுக்கேற்ப வழங்குவதில்லை எனவும் பிரஸ்தாபித்தனர். அத்துடன் ஒருவரின் தராதரத்துக்கு அப்பால் மருத்துவ சேவை வழங்கப்படுவதையும் சுட்டிக் காட்டினர்.

ஆய்வுகூடத் தொழில்நுட்பவியலாளர்கள் கருத்துக் கூறுகையில் Histology, Thyroxin ஆய்வைத் தவிர ஏனையவை யாவும் இங்கு செய்யலாம் எனத் தெரிவித்தனர். மானிப்பாய் கிறீன் மருத்துவமனை பொறுப்பாளர் தங்கள் ஆய்வுகூடத்தில் Thyroxin ஆய்வு செய்யலாம் எனக் கூறினார்.

சம்பந்தன் பெயரில் மூன்று நிறுவனங்கள் இயங்குவதால் மக்கள் பெரிதும் கஷ்டப்படுவதாகத் தெரிவித்தனர்.

இதனைக் கருத்திற்கொண்டு தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் கருத்து தெரிவிக்கையில் - சிங்கள தேசம் கடந்த காலங்களில் எமது மருத்து சேவையை பின்தள்ளும் நிலைக்கே இட்டுச்சென்றுள்ளது. ஆனால் தனியார் மருத்துவ சேவைகள் மக்களுக்கு அரிய பல சேவைகள் புரிந்து வருகின்றன. இந்த நிலையில் எமது மருத்துவ சேவை தரம் குறையாது இருக்க, சேவையின் தரத்தை மேம்படுத்த அனைவரும் ஒன்று திரண்டு உழைக்கவேண்டும் அதற்காகத்தான் தனியார் ஆங்கில மருத்துவ சேவையாளர் சங்கத்தை உருவாக்க முயற்சிசெய்தேன். ஆனால் செயற்குழுவின் செயற்பாடுகள் போதிய வேகம் பெறவில்லை. இதனால் தனியார் மருத்துவ மனைகளில் சேவை மேம்பாட்டில் சில குறைபாடுகள் தோன்றலாயின இனிவரும் காலங்களில் அவ்வாறான ஒரு சூழ்நிலை உருவாகாமல் பாதுகாப்பது உங்களுடைய பொறுப்பு.

புதிய நிர்வாகத்தை உருவாக்குமாறு கோருகின்றீர்கள். அதற்கமைவாக புதிய நிர்வாகத்தை தெரிவுசெய்து யாப்பு தயாரித்து அரசில் பதிவு செய்வதற்கு ஒழுங்கு செய்யவேண்டும்.

அரசமருத்துவ சேவை பலவீனம் அடைந்தபோது அதற்கு தனியார் ஆங்கில மருத்துவ சேவைமூலம் பலம்சேர்த்தவர்கள் நீங்கள். உங்கள் அர்ப்பணிப்பை தேசம் ஒருபோதும் மறக்காது.

பொது மருத்துவமனைகளுக்கு மிகவும் பாதிக்கப்பட்டவர்களும், வறுமைக்குட்பட்டவர்களுமே வருவதுண்டு. இவர்களைக் கவனிக்காமல் புறந்தள்ளி விட்டு தனியார் சிகிச்சை நிலையத்துக்கு கடமை நேரங்களில் கடமைக்குச் செல்வது தவிர்க்கப்படல் வேண்டும். நிலையத்தில் ஏற்படும் குறைபாடுகளுக்கு நிலையத்தை இயக்கும் உரிமையாளர் பொறுப்பு மருத்துவர்களே பொறுப்புடையவர்களாவர். மருத்துவர்கள் தரத்துக்கும் பயிற்சிக்கும் ஏற்ப செயற்பட முன்வர வேண்டும். மக்கள் எமது பகுதி மருத்துவ சேவையில் நம்பிக்கை இழந்து தென்னிலங்கை நோக்கி படையெடுத்துள்ளனர்.

இந்த நிலை மாறி எமது தாயகப் பிரதேசத்தில் நல்லதொரு மருத்துவ சேவை மக்களுக்கு கிடைக்க தங்கள் ஒத்துழைப்பை நாடிநிற்கின்றோம். அதேவேளை - பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு இந்தச் சங்கம் சென்று சேவையாற்ற முன்வர வேண்டுமென்று அவர் தெரிவித்தார். அத்துடன் தனியார் ஆங்கில மருத்துவ சேவையாளர் சங்க நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

# மர்மப் பொருள் வெடித்து இரு பெண்கள் படுகாயம்!

யாழ்ப்பாணம்—

தோட்டக் கரையிலிருந்து மர்மப் பொருள் அடங்கிய பார்சல் ஒன்றை எடுத்துப் பார்க்க முற்பட்ட வேளை - அந்தப் பொதியிலிருந்த மர்மப் பொருள் வெடித்ததில் இரு பெண்கள் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமை அளவெட்டி வடக்கு பகுதியில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த ஜெயராசா சந்திரபவானி (வயது 38), ஜெயராசா சந்திரவதனி (வயது 42) ஆகிய இரு பெண்களுமே காயமடைந்தவர்களாவர்.

தோட்டத்திலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தவேளை கிடந்த மர்மப் பொதியை எடுத்துப் பரீட்சித்துப் பார்த்தபோது அது திடீரென வெடித்தபோதே இருவரும் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.


ஓம் சக்தி
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!

பூப்புப்புனித நீராட்டு விழா அழைப்பு

அன்புடையீர்!
நிகழும் பார்த்திப வருடம் ஆடித்திங்கள் 16 ஆம் நாள் (01.08.2005) திங்கட்கிழமை பகல் (பழைய நேரம்) 12.16 மணிமுதல் 1.16 வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

எமது கனிஷ்ட புத்திரி
செல்வி
ஜனிவன்ஜா

அவர்களுக்கு இன்று திருவருள் துணைகொண்டு யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீகாமாட்சி அம்பாள் ஆலய (நாச்சிமார் கோயில்) மண்டபத்தில் பூப்புப் புனித நீராட்டு விழா நடத்த பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து செல்வியை ஆசீர்வதித்து விழா வைச் சி பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு.திருமதி. ஜ.அருள்ராசன் (அல்லி அண்ணா) தம்பிகள்
ரூபி நகைமாளிகை,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 2828

678/2, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.
(2002)



"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்"

சிவபூமி பாடசாலை
(சிறுவர் மனவிருத்திப் பாடசாலை)
1ஆம்ஆண்டு நிறைவு விழா

காலம் :- 01.08.2005 திங்கட்கிழமை மாலை 3.00 மணி
இடம் :- சிவபூமி பாடசாலை, கோண்டாவில்
தலைமை :- செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் (தலைவர், சிவபூமி அறக்கட்டளை)
பிரதம விருந்தினர் :- திருவாளர் சூரிப்பிள்ளை பாலசிங்கம் தம்பதிகள் (கணக்காளர் ஐக்கிய இராச்சியம்)
சிறப்பு விருந்தினர் :- திருமதி S.தெய்வேந்திரன் (பிரதேச செயலர் - நல்லூர்)
திருமிகு ம.ஜெயசீலன் தம்பதிகள் (தொழிலதிபர் - லண்டன்)
கௌரவ விருந்தினர் :- கவிஞர் புதுவை இரத்தினதுரை (பொறுப்பாளர், கலை பண்பாட்டுக் கழகம்)
ஆசியுரை :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் (நல்லை ஆதீனமுதல்வர்)
வாழ்த்துரைகள் :- கலாநிதி.சி.சிவலிங்கராஜா (தலைவர், தமிழ்த்துறை யாழ். பல்கலைக்கழகம்)
பேராசிரியர் வி.நித்தியானந்தன் (தலைவர், பொருண்மியத் துறை) யாழ்.பல்கலைக்கழகம்
திரு.சி.சுந்தரரேஸ்வரன் (முகாமையாளர் HNB சுன்னாகம்)
வைத்திய நிபுணர் இ.கணேசமூர்த்தி (யாழ். போதனா வைத்தியசாலை)
நிறைவுரை :- திருமிகு. ந.சதாசிவ ஐயர் (செயலாளர், சிவபூமி அறக்கட்டளை)

தொடர்ந்து சிவபூமி மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சிவபூமி
நிர்வாக சபை,

கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். C/4328



நிறைஞ்சனாஸ் சங்கானை
ரஜினி, பிரபு, ஜோதிகா, நயந்தாரா மற்றும் பலர் நடித்த
சந்திரமுகி
பஸ் போக்குவரத்துபாதை
இல 782 – காரைநகர் / 787 மாதகல்
காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)

நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
மகத்தான மூன்றாவது வெற்றி வாரம்
அக்சன் கிங் அர்ஜுன், சிநேகா நடித்த

சின்னா
காட்சிகள் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு! காதல் புகழ் பரத், ரேணுகா மேனன்
பெப்ரவரி 14

பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

நாகம்ஸ் சுன்னாகம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு!

ஜெயம்ரவி, ரேணுகாமேனன், வடிவேலு மற்றும் பலர் நடித்த
தாஸ்
காட்சிகள்:- 11.00, 3.00, 7.00, 10.00 (பழைய நேரம்)

மனோகரா யாழ்ப்பாணம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
மாதவன், சதா மற்றும் பலர் நடித்த
பிரியசகி

காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30



இதோ!
உடல் கட்டமைப்பு செய்பவர்களுக்கு யாழ். நகரில் முதன் முறையாக வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதி உன்னத உயர்புரதம் கூடிய பால்மா வகை.

65% புரதச் சத்தினைக் கொண்ட இந்த மா ஆனது மிக விரைவில் உங்கள் தசை நார்களை இறுகச் செய்கிறது (Cutting)

உடல் நிறையை சராசரி நிறைக்கு (60-70) கிலோகிரா முக்கு கொண்டு வருவதற்கு உதவுகிறது. எல்லோரும் உபயோகிக்கக் கூடியது.

உயர் காபோவைதரேற்று அடங்கியது. மிகவும் இலகுவான உடற்பயிற்சியுடனேயே உங்கள் அங்கங்களை சைஸ் (Size) செய்ய உதவுகிறது.



யாழ். முகவர்:-
Life Style Fitnes & Gim
கூழாவடி, ஆனைக்கோட்டை.
Tel. - 077 3256557, 077 7174895

உடற்கட்டமைப்புக்கு உடற்பயிற்சி மட்டும் போதாது என்பது அறிந்ததே!

# தமிழ் மக்களுக்கு நியாயமான உரிமை கிட்டும் வரை எம்மிடமுள்ள ஆயுதங்களை ஒப்படைக்க முடியாது!

## ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி.



மட்டக்களப்பு

தமிழ்த்தேசியத்துக்குப் பாதுகாப்பு அற்ற சூழலில் ஐரிஷ் விடுதலை இராணுவம் ஆயுதங்களை ஒப்படைக்க முன்வந்தது போன்று, விடுதலைப்புலிகளும் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுப்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு விடயமல்ல.

லண்டனில் உள்ள ஐரிஷ் விடுதலை இராணுவம் போன்று விடுதலைப்புலிகளும் ஆயுதங்களைக் கையளிக்கவேண்டும் என்று இலங்கை அரசுகோரிக்கை விடுத்திருப்பது தொடர்பாக - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் ஐ.பி.சி தமிழ் வானொலிக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

தமிழ்த்தேசியத்துக்கு பாதுகாப்பு அற்ற சூழலில் - ஐரிஷ் விடுதலை இராணுவம் ஆயுதங்களை ஒப்படைக்க முன்வந்தது போன்று, விடுதலைப்புலிகளும் ஒப்படைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுப்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு விடயமல்ல.

காரணம் என்னவெனில், விடுதலைப் புலிகளும், அரசாங்கமும் போர்நிறுத்த ஒப்பந்தத்தில் ஆர்வமில்லை அல்லது ஏற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலையில் - 14 நாட்கள் தவணையுடன், போர்நிறுத்த உடன்படிக்கையிலிருந்து வெளியேறலாம் என்று போர்நிறுத்த உடன்படிக்கையில்கூட தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

இவ்வாறான சூழ்நிலையில் கடந்த மூன்று வருடங்களும் நான்கு மாதங்களுமாக சமாதானப் பேச்சுவார்த்தை தொடரப்பட்டு, ஆறுசுற்றுப்பேச்சுவார்த்தைகளுக்கு பின்னர் அது தடைப்பட்டிருக்கிறது, இடைநிறுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் பேச்சுவார்த்தை இன்றுவரை தொடரவில்லை.

தமிழீழ விடுதலைப்புலிகள் சமர்ப்பித்துள்ள தன்னாட்சி அதிகாரசபை தொடர்பாக அந்த அடிப்படைத் தேவைகூட பேச்சுவார்த்தைக்காக எடுக்கப்படவுமில்லை. அது முன்னெடுத்துச்செல்லப்படவுமில்லை.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, தேசிய அழிவு என்று கூறப்படுகின்ற சுனாமி அனர்த்தத்தின் பின்னரும்கூட, அதற்கான மனிதாபிமான அடிப்படையில் மேற்கொள்ள வேண்டிய பொதுக்கட்டமைப்பையேனும் அரசு வழங்க முன்வராமல், அதைக் கைச்சாத்திடுவதற்குக்கூட ஆறு மாதகாலம் இழுத்தடித்திருந்தது. நீதித்துறையும் அதனைத் தடைசெய்துள்ளது. இவ்வாறான ஒருவித சூழலில், எவ்வாறு விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்கமுடியும்?

தமிழ் மக்களுடைய பலமே - தமிழீழ விடுதலைப்புலிகளுடைய ஆயுதம்தான். முறையான தீர்வு ஏற்பட்டு, தமிழர்கள் கோருகின்ற அதே அடிப்படையில் தங்களைத் தாமே பார்த்துக்கொள்ளக்கூடிய அடிப்படையில் ஒரு தீர்வை எய்தி, தங்களுடைய தாயகத்தைத் தாங்களே ஆளக்கூடிய சூழ்நில்ல ஏற்படாதவிடத்தில், அந்த ஆயுதம் என்ற முழுமையான தற்பாதுகாப்பை ஒப்படைக்க முடியாது. இது ஒரு தவறான செயலாகும்.

முதலில் அவர்கள் பிரச்சனையைத் தீர்க்கட்டும். பிரச்சனையைத் தீர்த்த பின்னர், தமிழீழ விடுதலைப்புலிகள் அது தொடர்பாகச் சிந்திப்பார்கள் எனத் தெரிவித்தார்,

## சுனாமியால் பாதிக்கப்பட்ட கடற்படையினருக்கு நிதியுதவி



கொழும்பு

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கடற்படையினருக்கு 15 மில்லியன் ரூபா நிதியுதவியை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி நேற்று முன்தினம் வழங்கினார்.

கடற்படைத் தலைமையகத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் - சுனாமியால் உயிரிழந்த கடற்படையினர் நால்வரின் குடும்பத்தினருக்கும், சுனாமியால் வீடுகள் - சொத்துக்களை இழந்த 149 கடற்படையினருக்குமே நஷ்டஈட்டுக் காசோலைகள் வழங்கப்பட்டன.

இந்தநிகழ்வில் - கடற்படையின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

## எகிப்து குண்டுவெடிப்பில் இலங்கையரும் உயிரிழப்பு!

கொழும்பு


எகிப்தில் கடந்த வாரம் இடம்பெற்ற பாரிய குண்டுவெடிப்புகளில் உயிரிழந்தவர்களில் இலங்கையைச் சேர்ந்த ஒருவரும் உள்ளடங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரிட்டன் லங்ஷயரை வதிவிடமாகக் கொண்ட சரித் ஜயவர்த்தன என்ற இலங்கையரே உயிரிழந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

பிரிட்டனில் இருந்து உல்லாசப் பயணியாக எகிப்துக்கு இவர் சென்றிருந்த போதே இந்த அனர்த்தம் இடம்பெற்றது.

கடந்தவாரம் எகிப்தில் இடம்பெற்ற இந்தக் குண்டுவெடிப்புகளின்போது, 64 பேர் உயிரிழந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பிரதமர் வேட்பாளராக அனுரா: சுதந்திரக் கட்சிக்குள் விசனம்!



கொழும்பு

பொதுத்தேர்தல் நடைபெறுவதற்கு இன்னமும் 5 வருடங்கள் இருக்கும் நிலையில் - அனுரா பண்டாரநாயக்கவை பிரதமர் வேட்பாளராக நியமிப்பதற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய செயற்குழு எடுத்த தீர்மானம் குறித்து, கட்சியின் செயற்பாட்டாளர்களிடையே விசனம் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தல் மிகவும் குறுகிய காலத்தில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதால், அதற்காக வேட்பாளரைத் தீர்மானிக்கும் சந்தர்ப்பத்திலேயே பிரதமர் வேட்பாளர் பதவிக்கும் பெயர் அறிவிக்கப்பட்டமை கட்சியிலுள்ள சிரேஷ்ட உறுப்பினர்களிடையே கடும் அதிருப்தியை தோற்றுவித்துள்ளது.

பிரதமர் பதவியை எதிர்பார்த்திருந்த அமைச்சர்களான சரத் அமுனுகம, ரட்ணசிறி விக்கிரமநாயக்க மற்றும் டி.எம்.ஜயரட்ண ஆகியோர் அனுராவின் பெயர், பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டதை அடுத்து பெரும் விரக்தியடைந்துள்ளனர்.

ஜனாதிபதியின் பொறுப்பிலிருந்த விவசாய அமைச்சை, ரட்ணசிறி விக்கிரமநாயக்கவுக்கு வழங்கியதன் காரணம் அவரை மகிழ்ச்சிப்படுத்துவதற்காகவே எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் ஜனாதிபதி சந்திரிகாவின் பின்னர், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவத்தை அனுரா பண்டாரநாயக்கவுக்கு வழங்குவதற்காகவே அவரைப் பிரதமர் வேட்பாளராக நியமிப்பதென ஜனாதிபதி முடிவெடுத்ததாகவும் கட்சியின் உள்ளகத் தகவல்கள் தெரிவித்தன. (தே)

## மஹிந்தவை வெற்றிபெறச் செய்ய

# அனைத்துக் கட்சிகளின் ஆதரவையும் பெறுவதற்கு சுதந்திரக் கட்சி முடிவு!

கொழும்பு

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைத் தேர்தலில் வெற்றி பெறச் செய்யும் வகையில் - ஐ.தே.கட்சிக்கு எதிரான அனைத்துக் கட்சிகளினதும் ஆதரவுடன் கூடிய கொள்கைப் பிரகடனத்தைத் தயாரிப்பதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு - விசேட குழு ஒன்றை நியமித்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் அமைச்சர்களான அனுரா பண்டாரநாயக்க, லக்ஷ்மன் கதிர்காமர், மைத்திரிபால சிறிசேன, கலாநிதி சரத் அமுனுகம, மங்கள சமரவீர, டி.எம். ஜயரட்ண, சுசில் பிரேம்ஜெயந்த, நிமால் சிறிபால டி சில்வா உட்பட, மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலானா ஆகியோரும் இந்தக் குழுவில் அடங்குகின்றனர்.

ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக்கூட்டத்தில் இந்த விசேட குழு அமைக்கப்பட்டது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கொள்கைத் திட்டத்தை தயாரித்தல் உட்பட, ஜனாதிபதித் தேர்தலில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வெற்றிபெறுவதற்குத் தேவையான திட்டங்களைத் தயாரிப்பது குறித்த வேலைத்திட்டங்கள் இந்தக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அடுத்த வாரம் இந்தக் குழு கூடி, மேற்படி செயற்பாடுகள் குறித்த ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தீர்மானித்துள்ளதாக கட்சியின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (தே)

# 3 முஸ்லிம் கட்சிகள் இணைந்து புதிய கூட்டணி உருவாகிறது!

கொழும்பு

முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்கு கௌரவமான தீர்வைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன், மூன்று முஸ்லிம் கட்சிகள் ஒன்றிணைந்து அடுத்த சில நாட்களில் முஸ்லிம் தேசிய கூட்டணி என்ற பெயரில் ஒரு முன்னணியை உருவாக்கவுள்ளன.

ஜனநாயக ஐக்கிய கூட்டணி, சிறிலங்கா முஸ்லிம் கட்சி, ஐக்கிய மக்கள் முஸ்லிம் கூட்டணி ஆகியன ஒன்றிணைந்தே இந்த புதிய முன்னணியை உருவாக்கவுள்ளன.

2005 ஆம் ஆண்டு முடிவடைவதற்குள் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருக்கும் முஸ்லிம் தேசிய கூட்டணி - தங்களின் புதிய முன்னணி ஊடாக வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கும் திட்டமிட்டுள்ளது.

இந்தப் புதிய முன்னணிக்கான புரிந்துணர்வு உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டுவிட்டதாக சிறிலங்கா முஸ்லிம் கட்சியின் தேசிய அமைப்பாளர் அப்துல் ரசூல் தெரிவித்தார்.

இந்த நாட்டிலுள்ள அனைவரும் சட்டம் அறிந்தவர்கள் அல்ல. எனினும், சாதாரண மக்களுக்குத் தெரிந்த கணக்கு முறையொன்று உள்ளது. கணக்குப் பிரச்சினையொன்று இருந்தால், சாதாரண மக்கள் கைவிரல்களைக் கொண்டே எண்ணுவார்கள்.

1999 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஜனாதிபதியின் 6 ஆண்டுகள் பதவிக்காலம் 2005 ஆம் ஆண்டுடன் முடிவடைகிறதென கணக்குப் பார்க்கும் எவருக்கும் நன்கு தெரியும். எனவே இந்த வருடம் முடிவடைவதற்குள் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டும் என அப்துல் ரசூல் குறிப்பிட்டார்.

புதிய முன்னணியின் தீர்மானங்கள் கூட்டணியிலிருக்கும் தலைமைத்துவ சபையினாலேயே மேற்கொள்ளப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# ஜனாதிபதித் தேர்தல் பற்றிய அறிவிப்பு எதிர்வரும் 8 ஆம் திகதி வெளியாகும்!

கொழும்பு

அடுத்த ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் திகதி குறித்து - எதிர்வரும் எட்டாம் திகதிக்குப் பின்னர் தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு வெளியிடலாம் என, அரசியலமைப்பு நிபுணர்கள் தெரிவித்தனர்.

அரசியலமைப்பு சரத்து 31-3 இற்கு அமைய ஜனாதிபதித் தேர்தலை, தற்போதைய ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவடைய ஒரு மாதத்துக்கு குறையாமலும், இரண்டு மாதத்துக்கு மேற்படாமலும் நடத்தவேண்டும்.

இதற்கமைய 1999 ஆம் ஆண்டு டிசெம்பர் 22 ஆம் திகதி சத்தியப்பிரமாணம் செய்த ஜனாதிபதி சந்திரிகாவின் பதவிக்காலம், இந்த வருடம் டிசெம்பர் 22 ஆம் திகதி முடிவடையவுள்ளது.

இதற்கமைய ஜனாதிபதித் தேர்தல் ஒக்ரோபர் 22 இற்கும், நவம்பர் 22, இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியிலேயே. நடத்தப்பட வேண்டும்.

இதேபோன்று தேர்தல் நடைபெறும் திகதிக்கு ஒரு மாதத்துக்கும் குறையாத, இரண்டு மாதங்களுக்கும் மேற்படாத காலப்பகுதியில் தேர்தல் ஆணையாளரால் வேட்பாளர் நியமனப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படவேண்டுமென அரசியலமைப்பு நிபுணர்கள் தெரிவித்தனர்.

நியமனப் பத்திரங்கள் கையேற்பதற்கு இரண்டு வாரங்கள் குறையாத காலப்பகுதியினுள் தேர்தல் நடைபெறும் திகதி அறிவிக்கப்பட வேண்டும். இதன்படி தேர்தல் ஆணையாளர் - ஜனாதிபதி தேர்தலை நடத்துவது குறித்த அறிவித்தலை வெளியிட வேண்டிய காலப்பகுதியாக, எதிர்வரும் ஓகஸ்ட் 8 ஆம் திகதி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் திகதியை தேர்தல் ஆணையாளர் வெளியிட்ட பின்னர், எவராவது அந்த அறிவிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்தால், அது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக தேர்தல் ஆணையாளர் சட்ட ஆலோசனைகளைப் பெற்றுள்ளார்.

இது தொடர்பாக சட்டமா அதிபர் மற்றும் உதவித்தேர்தல் ஆணையாளருடன், தேர்தல் ஆணையாளர் கலந்துரையாடியுள்ளார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுமாக இருந்தால், அது 2004 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலின்படியே நடைபெறும் எனவும், அந்த வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகள் விரைவாக இடம்பெறுவதாகவும் தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன் தேர்தல் பெறுபேறுகளை விரைவாக வெளியிடும் வகையில் - தேர்தல் திணைக்களத்துடன் தொடர்புடைய கணினி நிறுவனத்துடனும் தேர்தல் ஆணையாளர் கலந்துரையாடலை நடத்தியுள்ளார் எனத் தகவல்கள் தெரிவித்தன. (தே)

# டிஸ்கவரியின் பாதுகாப்பு குறித்து விண்வெளி வீரர்கள் பரிசோதனை!

ஹூஸ்டன் —


டிஸ்கவரியில் சென்ற இரண்டு வீரர்கள், முதல் முறையாக விண்வெளியில் நேற்றுமுன்தினம் நடந்து, டிஸ்கவரியின் பாதுகாப்பு அம்சங்கள் குறித்து ஆராய்ந்தனர்.

கடந்த 26ஆம் திகதி, டிஸ்கவரி விண்வெளி ஓடம் செலுத்தப்பட்டபோது, அதிலிருந்து இரண்டு பாகங்கள் கழன்று விழுந்தன. ஒன்று எரிபொருள் கலத்திலிருந்தும், மற்றொன்று ஓடத்தின் மூக்குப் பகுதியிலிருந்தும் விழுந்தன. எரிபொருள் கலத்திலிருந்து விழுந்த பாகம் பெரியது. மூக்குப் பகுதியிலிருந்து விழுந்த சிறிய பாகத்தால், ஓடத்தின் இறக்கையில் சேதம் ஏற்பட்டுள்ளதாக சந்தேகம் எழுந்துள்ளது.

ஓடத்தின் இறக்கைகளில் வெப்ப பாதுகாப்புத்தகடுகள் பொருத்தப்பட்டுள்ளன. ஓடத்தின் உட்பகுதிக்கு இவையே பாதுகாப்பு அளிக்கின்றன. கொலம்பிய விண்வெணி ஓடம் வெடித்துச் சிதறியதற்கு, வெப்பத் தகடுகளில் ஏற்பட்ட சேதமே முக்கிய காரணமாக இருந்தது.

விண்வெளியும், பூமியும் சந்திக்கும் இடத்தில் மிகப்பெரிய அளவில் வெப்பம் நிலவுகிறது. விண்வெளியிலிருந்து இப்பகுதியை ஓடம் ஊடுருவும்போது, அந்த வெப்பத்தைத் தாங்கவேண்டும். வெப்ப பாதுகாப்புத் தகடுகள் சேதமடைந்திருந்ததால், அந்த வெப்பத்தைத் தாங்க முடியாமல் கொலம்பியா வெடித்துச் சிதறியது. அதிலிருந்த இந்திய விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லா உட்பட ஏழு பேரும் பலியாகினர்.

எனவே, டிஸ்கவரியின் ஒவ்வொரு பாகமும் உன்னிப்பாக பரிசோதிக்கப்படுகிறது. டிஸ்கவரியில் பொருத்தப்பட்டுள்ள நூறடி நீள ரோபோ கரத்தின் மூலமும், சர்வதேச விண்வெளி நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள ரோபோ கரத்தின் மூலமும் டிஸ்கவரியின் வெப்ப பாதுகாப்புத் தகடுகள் கடந்த வெள்ளியன்று பரிசோதிக்கப்பட்டன. வெப்ப பாதுகாப்புத் தகடுகள் பொருத்தப்பட்ட ஆறு இடங்களில் சேதம் ஏற்பட்டுள்ளது. அவ்விடங்கள் ரோபோ கரங்களில் உள்ள லேசர் கமராக்கள் மூலம் பரிசோதிக்கப்பட்டன.



பூமிக்கு பாதுகாப்பாக திரும்பக்கூடிய அளவுக்கு டிஸ்கவரி நல்லநிலையில் இருப்பதாக அதன் திட்ட நிர்வாகிகள் நம்பிக்கை தெரிவித்தனர். அடுத்தமாதம் ஏழாம் திகதி ஓடம் பூமிக்குத் திரும்ப முதலில் திட்டமிடப்பட்டிருந்தது. தற்போது, மேலும் ஒருநாள் நீடிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. ஓடத்தின் எரிபொருள் கலத்தில் தொடர்ந்து பிரச்சினை ஏற்படுவதால், அதற்கு நிரந்தரத் தீர்வு காணும் வரை மீண்டும் ஓடங்களை ஏவுவதில்லை என்று நாசா முடிவு செய்துள்ளது. இதன் காரணமாக, சர்வதேச விண்வெளி நிலையத்தில் உள்ள வீரர்களுக்கு டிஸ்கவரி வீரர்கள் மேலும் ஒருநாள் தங்கி உதவி செய்வதற்காக, ஓடம் பூமிக்குத் திரும்பும் திகதி ஒருநாள் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

டிஸ்கவரியில் சென்றுள்ள ஜப்பானின் சொய்ச்சி நகுச்சியும், ஸ்ரீபன் ரொபின்சனும் விண்வெளியில் முதல்முறையாக நேற்றுமுன்தினம் நடந்தனர். விண்வெளியில் நடக்க பயன்படுத்தப்படும் உடை அவர்களுக்கு அணிவிக்கப்பட்டது. சர்வதேச விண்வெளி நிலையத்தில் தங்கியுள்ள அவர்கள், அதிலிருந்து வெளியே வந்து விண்வெளியில் மூன்றுமுறை நடக்கவுள்ளனர்.

இந்த நடையின்போது, டிஸ்கவரியின் பாதுகாப்பு அம்சங்கள் குறித்து ஆய்வு செய்வர். குறிப்பாக, டிஸ்கவரியின் வெப்ப பாதுகாப்பு தகடுகள் பற்றி ஆய்வு செய்யவுள்ளனர்.

விண்வெளியில் நடப்பதற்காக சர்வதேச விண்வெளி நிலையத்தை விட்டு வெளியே வந்த நகுச்சி, வாவ்...! என்ன அருமையான காட்சி... என்று பிரமித்துக் கூறினார். கொலம்பியா விண்வெளி ஓடம் வெடித்துச் சிதறியதால், ஓடத்தின் பாதுகாப்பு அம்சங்களில் நாசா விஞ்ஞானிகள் தீவிர கவனம் செலுத்துகின்றனர். இதற்காக மட்டும் ரூ. 10000 கோடி செலவிடப்படுகிறது.




## அமெரிக்க ஹெலி ஆப்கானில் வீழ்ந்தது!

காபூல் —

ஆப்கானிஸ்தானில் பக்ராம் நகரிலுள்ள அமெரிக்க ராணுவத் தளத்திலிருந்து பயிற்சிக்காகச் சென்ற ஹெலிகொப்ரர் திடீரென்று விழுந்து நொருங்கியது. இந்த விபத்தில் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை. எனினும் விமானிகள் இருவரும் சிறிய காயத்துடன் உயிர் தப்பினர்.

இந்த ஹெலிகொப்ரரை தாங்களே சுட்டு வீழ்த்தியதாக தலிபான் தீவிரவாதிகள் தெரிவித்தனர். ஆனால், அதை அமெரிக்க ராணுவம் மறுத்துள்ளது. தொழில்நுட்ப கோளாறு காரணமாக இந்த விபத்து ஏற்பட்டதாக அமெரிக்கா கூறியுள்ளது.

அண்மையில் அங்கு அமெரிக்க ராணுவத்துக்கு சொந்தமான 2 ஹெலிகொப்ரர்கள் விபத்துக்குள்ளாகி நொருங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சதாம் ஹுசைன் மீது மர்மமனிதன் நீதிமன்றுக்கு வெளியே தாக்குதல்!

பாக்தாத் —


ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன் விசாரணைக்காக நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தபோது அவரை மர்ம மனிதன் ஒருவர் தாக்கினார்.

இந்த பரபரப்பான சம்பவம் கடந்த வெள்ளியன்று இடம்பெற்றது.

ஈராக் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைன் மீது 1991ஆம் ஆண்டு ஏற்பட்ட கலவரத்தில் குர்திஷ் மற்றும் ஷியா முஸ்லிம்கள் நசுக்கப்பட்டதாக அவர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணைக்காக சதாம் ஹுசைன் நீதிமன்றுக்கு வந்திருந்தார். அவருக்காக அவரது சட்டத்தரணி கலீல் துலாய்மி வாதாடிக் கொண்டிருந்தார். விசாரணை முடிந்ததும் சதாம் ஹுசைன் அறையிலிருந்து வெளியேறத் தயாரானார்.

அப்போது அங்கு நின்றுகொண்டிருந்த ஒரு மர்ம மனிதன் சதாம் ஹுசேனைத் தாக்கினான். இதை சதாம் ஹுசைன் சற்றும் எதிர்பார்க்கவில்லை. பின்பு அவரும் அந்த மர்ம மனிதனை அடித்தார். இருவரும் ஒருவரையொருவர் அடித்துக் கொண்டனர்.



இந்தச் சண்டையை நிறுத்த நீதிபதியோ, அங்கு கூடியிருந்தவர்களோ முயற்சி செய்யவில்லை. இந்த தாக்குதலில் சதாம் ஹுசைன் காயமடைந்தாரா? என்ற விபரமும் தெரியவில்லை.

சதாம் ஹுசைன் ஆதரவு சட்ட நிபுணர்கள் குழு ஜோர்தான் தலைநகர் அம்மானிலிருந்து இந்தத் தகவலை வெளியிட்டனர்.

ஆனால், இந்தத் தகவலை அமெரிக்கா மறுத்துள்ளது. சதாம் ஹுசைன் அமெரிக்க ராணுவத்தின் பாதுகாப்பில்தான் உள்ளார்.

அவரை யாரும் தாக்கவில்லை. நீதிமன்ற அறையில் தாக்குதல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்று அமெரிக்க ராணுவத் தளபதி கிறிஸ்டி மில்லர் தெரிவித்தார்.

**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 190ஆவது ஆண்டு நிறுவுனர் நினைவுநாள் பரிசளிப்பு தினம் என்பவற்றையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது**

# 190ஆவது நிறுவுனர் நாளில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

இன்று யாழ்.மத்திய கல்லூரியினருக்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததொரு நாளாகும். இந்த மண் எங்கள் சொந்த மண் என்று உரிமை கொண்டாடக் கூடியதாக ஏற்கனவே பாடம் நடைபெற்றுக் கொண்டிருந்த ஒல்லாந்து கட்டடத்தை கொள்முதல் செய்து, அதன் உறுதியில் கையொப்பமிட்ட நாளே 1816 ஒகஸ்ட் 01.

இதற்கான ஆதாரம் இக்கல்லூரியின் நிறுவுனரான வண. ஜேம்ஸ் லிஞ்ச் 1816ஆம் ஆண்டு எப்ரல் திகதியிட்டு யாழ்ப்பாணத்திலிருந்து இங்கிலாந்தின் மெதடிஸ் மிசனரிக்குழுவுக்கு எழுதிய கடிதத்தில் 'ஜுலை மாதத்தில் கடைசித் திங்கட்கிழமையன்று நாங்கள் கொழும்பில் கூடி கணக்குகளை நிறைவேற்றி தொடர்ந்து எமது மாவட்ட கூட்டத்தை நடத்தவுள்ளோம்' எனக் காணப்படுகிறது.

பின்னர் ஒவ்வொரு ஆண்டும் கூடிய தொடர் கூட்டத்தின் முதற் கூட்டம் திட்டமிட்டவாறு 1816இல் நடைபெற்றது. கணக்குகள் சமர்ப்பிப்பதில் ஏற்கனவே வரைபடம் இடப்பட்டு எழுதப்பட்ட உறுதியில் கையொப்பமிட்டது உள்ளடங்கும்.

இக்கட்டடம் முன்னாளில் இந்நாட்டை அரசாண்டவர்களினால் முறையற்று தோன்றிய வாரிசுகளை பராமரிக்கும் அநாதை இல்லமாக இருந்துவந்து, பின்னர் அரசின் செலவீனச் சுருக்கத்தால் நிறுத்தப்பட்டது. இதனாலேயே யாழ்.மத்திய கல்லூரியின் இக்கட்டடம் அநாதையில்லம் என பெயர் பெற்றிருந்தது.

இக்கட்டடத்துக்கு 'லூதரன் தேவாலயம்' என மற்றொரு பெயரும் இருந்தது. அந்நாளில் லூதரன் திருச்சபையே இல்லாதிருந்த யாழ்ப்பாணத்தில் இக்கட்டடத்தின் பெயர் 'லூதரன் தேவாலயம்' என பெயர் பெற்றதும் ஒரு வரலாற்றுச் சம்பவம். அந்நாளில் யாழ்.கோட்டையில் நிலைபெற்றிருந்த ஜேர்மனிய படையினர் தமக்கு தேவநற்கருணை வழங்கப்படவேண்டுமென ஆட்சியாளர்களை கேட்டுக் கொண்டமையால், இதன் பொருட்டு அரச உரிமை பெற்று இக்கட்டடத்தை லூதரன் தேவாலயம் ஆக்கி ஜேர்மனியப் படைகளுக்கு நற்கருணை வழங்கப்பட் டது.

இக்கட்டடத்தில் ஓர் ஆங்கிலப் பாடசாலையை ஆரம்பித்த வண.ஜேம்ஸ் லிஞ்ச் இந்தப் பாடசாலையின் பயனையும், வளர்ச்சியையும் அவதானித்தும், மக்களின் வேண்டுகோளுக்கு இணங்கவும் யாழ் முதல் பருத்தித்துறை வரை சுதேச பாடசாலைகளை நிறுவுவது பயனுடையதாகும் என்ற தமது விருப்பத்தை இங்கிலாந்திலிருந்த தலைமைச் செயலகத்துக்கு எழுதினார். தலைமைச் செயலகமும் அவரது கருத்தை ஏற்று அங்கீகாரம் வழங்கியது.

இத்திட்டத்தினாலேயே லூதரன் தேவாலயக் கட்டடத்தில் இயங்கிவந்த ஆங்கிலப் பாடசாலை, யாழ்.ஆங்கிலப் பாடசாலையென 1817ஆம் ஆண்டில் பெயர் பெற்றது. பின்னர் 1826ஆம் ஆண்டில் யாழ் வந்து சேர்ந்து, 1834ஆம் ஆண்டில் நிர்வாகப் பொறுப்பை ஏற்ற வண.டொக்ரர் பீற்றர் பேர்சிவல் யாழ்.ஆங்கிலப் பாடசாலையை விரிவாக்கம் செய்து யாழ்.மத்திய பாடசாலை என பெயர் மாற்றம் செய்தார்.

தொடர்ச்சியான வளர்ச்சி கண்டு வளர்ந்த பாடசாலை 1869ஆம் ஆண்டில் கல்லூரி என உயர்ச்சி பெற்றது.

பாடசாலைகளைப் பொறுத்தவரையில் பெயர் மாற்றம் புதியதோர் அம்சமன்று. சுண்டுக்குளி செமினரி- பரியோவான் கல்லூரியானது. மகளிர் விடுதி பாடசாலை-வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையானது. உடுவில் மகளிர் விடுதிப் பாடசாலை-உடுவில் மகளிர் கல்லூரியானது.

யாழ்.கத்தோலிக்க பாடசாலை-புனித பத்திரிசியார் கல்லூரியானது. நகர் உயர் சுதேச பாடசாலை-யாழ்.இந்துக் கல்லூரியாகியது.

பற்றிக் கோற்றா செமினரி ஆரம்பிக்கப்பட்டு, நிறுத்தப்பட்டு பல வருடங்களின் பின் யாழ்ப்பாணக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. 1935 இலேயே யூனியன் கல்லூரி என்ற பெயர் இடப்பட்டது.

ஆயினும், பாடசாலைகளின் ஆரம்பநாளைக் கண்டறிவது பெயர் மாற்றத்தாலல்ல என்று அடிப்படை வரைவிலக்கணம் வகுத்தார் அதி.வண.ஆயர் சபாபதி குலேந்திரன். அவர் எழுதிய யாழ்ப்பாணக் கல்லூரி வரலாறு என்னும் நூலின் 315ஆம் பக்கத்தில் இவ்வாறு கூறுகிறார்.

இந்த ஆண்டு நிறைவுகளில் நாம் எதைக் கொண்டாடுகின்றோம்? யாழ்ப்பாணக் கல்லூரி என்ற பெயரில், கல்லூரி 1872 ஆம் ஆண்டிலேயே ஆரம்பமாகியது. நாங்கள் 1823ஆம் ஆண்டில் நிறுவப்பெற்ற பற்றிக் கோற்றா செமினறியின் ஆரம்ப நாளையே கொண்டாடுகின்றோம். அதாவது 1872இல் ஆரம்பிக்கப் பெற்றதும், 1823இல் ஆரம்பிக்கப் பெற்றதும், பெயர் வித்தியாசம் இருப்பினும் ஒன்றேயாகும். செமினரியின் மீள் பிறப்பே யாழ்ப்பாணக் கல்லூரி.

ஆகவே, இவ்வரைவிலக்கணத்துடன் யாழ்.மத்திய கல்லூரியின் வரலாற்றை அணுகுவோமாயின் வண.லிஞ்ச் ஆரம்பித்த ஆங்கிலப் பாடசாலை 1817இல் பெயர்மாற்றம் பெற்று 1834இல் வளர்ச்சிபெற்ற பாடசாலை, மீண்டும் பெயர் மாற்றம் பெற்று 1869ஆம் ஆண்டில் தரத்தால் உயர்ந்து கல்லூரியாயிற்று.

இதில் அவதானிக்கவேண்டிய அம்சம் யாதெனில், இக்கல்லூரி தொடங்கிய நாளிலிருந்து தொடர்ச்சியாக இயங்கி வந்துள்ளது. 1817இற்கு முன்னர் வண.லிஞ்ச் ஆரம்பித்த ஆங்கிலப் பாடசாலை எப்போது ஆரம்பமாகியது என்பதை அறியவேண்டியதும் அவசியமானது.

வண.லிஞ்ச் தாம் யாழில் இருந்து இங்கிலாந்துக்கெழுதிய 17.08.1815 திகதியிட்ட கடிதத்தில்- 'நானும் காற்றோட்டமான சுகாதாரத்துக்கேற்ற இடமொன்றைக் கொள்முதல் செய்துள்ளேன். இப்பொழுது 60ஆண் பிள்ளைகள் ஆங்கிலம் கற்கிறார்கள்' என்று குறிப்பிட்டுள்ளமை முதலாவது ஆதாரம். மீண்டும் 15.11.1815 திகதியிட்ட கடிதத்தில் தாம் கொள்முதல் செய்துள்ள இடம்- குறிப்பிடப்பட்ட பெரியதோர் இல்லம்.


இது 90 அடி நீளமாயும் 20 அடி அகலமாயும் உள்ளது. இவ்வில்லத்தின் பின்னால் 100 அடி காணியுள்ளது. இவ்விடமானது யாழ். கோட்டையிலிருந்து கால் மைல் தூரத்தில் இருக்கிறது. எனது பாடசாலையின் ஆண் பிள்ளைகள் போர்த்துக்கேய, தமிழ் மொழிகளை பேசுகின்றார்கள். அவர்கள் ஆங்கில மொழியை வாசிப்பார்கள், எழுதுவார்கள் என்பது இரண்டாவது சான்றாகும்.

மூன்றாவதாக அந்நாளில் தேசாதிபதியாக இருந்த சேர் றொபேட் பிறவுண்றிக் கொழும்பு அரச மனையிலிருந்து 11.12.1815 திகதியிட்டு எழுதிய கடிதத்துடன் அனுப்பிய வேதாகமச் சங்கத்தின் ஆண்டறிக்கையில் 'உவெஸ்லியன் மிசனரியாகிய வண. ஜேம்ஸ் லிஞ்ச் தினசரி 100 ஆண் பிள்ளைகளுக்கு கற்பிக்கிறார்' என்று எழுதியிருப்பதும் அவருடைய ஆங்கிலப் பாடசாலையின் வளர்ச்சியை எடுத்துக் கூறும் ஆவணங்களாகின்றன. ஆதாரமாகவுள்ள மேற்கூறிய கடிதங்கள் யாவும் 1815ஆம் ஆண்டில் எழுதப்பெற்றவை என்பது கவனிக்கத்தக்கது.

ஆக்கம் :
கா.மாணிக்கவாசகர்
(முன்னாள் நூலகர்,
யாழ்.மத்திய கல்லூரி)

# கியூமெடிக்கா நிதி உதவியுடன் சைக்கிள்கள் அன்பளிப்பு!





யாழ்ப்பாணம்

சுனாமித் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுள் 35 பேருக்கு கியூமெடிக்கா நிறுவனத்தின் உதவியுடன், சர்வதேச மாணவர் பேரவையினரால் சைக்கிள் வழங்கும் நிகழ்வு -

நேற்றுமுன்தினம் மாலை 5 மணிக்கு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை கேட்போர் கூடத்தில் முன்னாள் மாணவர் ஒன்றியத் தலைவர் செல்வக்குமார் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், கியூமெடிக்கா நிறுவன இலங்கைக்கான இணைப்பாளர் சாம் ஜெயசூர்யா, யாழ்.மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி, யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளர், யாழ்.பல்கலைக்கழக சமூகவியற்துறைப் பேராசிரியர் சண்முகலிங்கம் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் பேராசிரியர் சண் முகலிங்கம், கலைவிழி ஆகியோரால் சுனாமியால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

# தேசிய மட்டப் போட்டிக்கு இரு மாணவர்கள் தெரிவு

சுதுமலை

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்ட இரண்டு பாடசாலை மாணவர்கள், உயரம் பாய்தல் போட்டியில் மாகாண மட்டத்துக்குத் தெரிவாகி, தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்றவுள்ளனர்.

21 வயதின் கீழ் உயரம் பாய்தலில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவன் சிறிகாந்தன் ரஜீபன் மாகாணப் போட்டியில் 1.90 மீற்றர் பாய்ந்து முதலாம் இடத்தைப் பெற்றார்.

19 வயதுப் பிரிவு உயரம் பாய்தல் போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மாணவன் கே.கோபிநாத் மாகாணப் போட்டியில் 1.79 மீற்றர் பாய்ந்து முதலாமிடத்தைப் பெற்றுள்ளார். (91)

# வடமராட்சி, தீவக வலயங்களில் ஆசிரியர்களுக்கு தங்குமிட வசதி

யாழ்ப்பாணம்

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் நிதி உதவியுடன் தீவக, வடமராட்சி வலயக் கல்விப் பணிமனைகளில் ஆசிரியர்களுக்குத் தங்குமிட வசதி செய்துகொடுக்கப்படவுள்ளது.

தீவகம் மற்றும் வடமராட்சி கிழக்கு வலயப் பாடசாலைகளில் தூர இடத்திலிருந்து சென்று கல்வி கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்குப் போக்குவரத்து பெரும் பிரச்சினையாக இருப்பதோடு, வெளிமாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்களும் இந்த வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் பணிபுரிவதற்கு தங்குமிட வசதிகள் இல்லாதது பெரும் குறைபாடாக இருந்து வருகிறது.

நீண்டகாலமாக இருந்துவருகின்ற தங்குமிட வசதியின்மையை நிவர்த்திசெய்து கொள்வதன் மூலம் - இந்த வலயங்களுக்குத் தூர இடத்து ஆசிரியர்களும், - வெளிமாவட்ட ஆசிரியர்களும் தங்கியிருந்து கல்வியைக் கற்பிக்க முடியும் என வடக்கு - கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

# கோப்பாயில் திடீர் மின்தடையால் வைத்தியசாலை பணிகள் பாதிப்பு

கோப்பாய்

கோப்பாய் பிரதேசத்தின் பல பகுதிகளிலும் மின்சாரம் திடீர் திடீரெனத் தடைப்படுவதால், கோப்பாய் அரசினர் வைத்தியசாலையின் செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்படுவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

வைத்தியசாலை மின்பிறப்பாக்கியைக்கொண்டே வைத்தியசாலைச் செயற்பாடுகளுக்கு மின் பெறப்படுகின்றபோதிலும், பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக வைத்தியர் ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன் பல்வேறுபட்ட தொழில் நிறுவனங்களும் தமது அன்றாடச் செயற்பாடுகள் மின் விநியோகம் சீரின்மையால் பாதிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தன.

எனவே, இவற்றைக் கருத்திற் கொண்டு - மின்சார வழங்கலில் தற்போது நிலவிவரும் சீரற்ற நிலையை நிவர்த்திசெய்யுமாறு மின்சாரசபையினரைப் பலரும் கோரியுள்ளனர். (90)

# வலி.வடக்கில் அபிவிருத்தி திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு

உடுவில்

வலி.வடக்குப் பிரதேச செயலகத்திற்கு இந்த வருடத்துக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளன.

இளவாலை கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத் திருத்தம் 50 ஆயிரம் ரூபா, இளவாலை கிராம அபிவிருத்திச்சங்க புனரமைப்பு 50 ஆயிரம் ரூபா, அளவெட்டி வடக்கு பாரதிதாசன் சனசமுக நிலைய திருத்தம் 50 ஆயிரம் ரூபா -


அளவெட்டி கலைவாணி ச.ச.நிலைய புத்தக கொள்வனவு 25 ஆயிரம் ரூபா, குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்க புத்தக விநியோகம் 50 ஆயிரம் ரூபா, துர்க்காபுரம் அம்பாள் ச.ச. நிலைய தளபாட விநியோகம் 15 ஆயிரம் ரூபா, பன்னாலை சிவானந்தா முன்பள்ளி தளபாட விநியோகம் 20 ஆயிரம் ரூபா, மல்லாகம் மகா வித்தியாலய கிணறு ஆழமாக்கல் 20 ஆயிரம் ரூபா, குளமங்கால் றோமன் கத்தோலிக்க வித்தியாலய மின் மோட்டார் விநியோகம் 20 ஆயிரம் ரூபாவும் -

வசாவிளான் குட்டியம்புலம் அரச தமிழ்கலவன் பாடசாலை மின் விநியோகம், நீர் விநியோகம் 35 ஆயிரம் ரூபா, வசாவிளான் குட்டியம்புலம் அரச தமிழ்க் கலவன் பாடசாலைக்கு கட்டட திருத்தம் 50 ஆயிரம் ரூபா, தளபாட விநியோகம் 90 ஆயிரம் ரூபா, அளவெட்டி வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு லமினேற்றிங் இயந்திரக் கொள்வனவு 15 ஆயிரம் ரூபா, அளவெட்டி சதானந்த வித்தியாலய ஆசிரியர்களுக்கான தளபாடக் கொள்வனவு 15 ஆயிரம் ரூபா, மல்லாகம் விசாலாட்சி வித்தியாலய தட்டச்சுக் கொள்வனவுக்கு 25 ஆயிரம் ரூபாவும் -

அளவெட்டி அருணாசல வித்தியாசாலை கட்டடத் திருத்தத்துக்கு 75 ஆயிரம் ரூபா, தளபாடக் கொள்வனவுக்கு 25 ஆயிரம் ரூபா, கணினிக் கொள்வனவுக்கு 75 ஆயிரம் ரூபா கட்டுவன் புலம் மகா வித்தியாலய நீர் விநியோகத்துக்கு 50 ஆயிரம் ரூபாவும் என நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (101)

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை இரண்டு



பெயர் : ப.சுபான்
முகவரி : கரவெட்டி

அகவை நான்கு



பெயர் : சி.சாகித்தாரா
முகவரி : கொற்றாவத்தை



பெயர் : சி.சாகித்தியா
முகவரி : கொற்றாவத்தை

அகவை பத்து



பெயர் : கி.மாதுளா
முகவரி : கரவெட்டி

## வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :

முகவரி :

பிறந்த ஆண்டு :

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்

# சாவகச்சேரி நகரப்பகுதி புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

சாவகச்சேரி

சாவகச்சேரி நகர் - புனர்நிர்மாண அமைப்பு வேலைகளை மேற்கொள்ள முன்னோடியாக கட்டட இடிபாடுகளை அகற்றுவதற்குத் தெரிவுசெய்யப்பட்ட இடங்களில், சிரமதானம் மேற்கொள்வதற்கு இரண்டு கட்டங்களாக வேலைகளை மேற்கொள்ள - நிவாரணம், புனர்வாழ்வு, புனரமைப்பு, நல்லிணக்க அமைச்சின் செயலாளரால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புனரமைப்புப் பணிகள் இரண்டு கட்டங்களாக மேற்கொள்ளப்படவுள்ளன. முதலாவது திட்டத்தின் மூலம் - நகர மண்டபப்பகுதி, சிறுவர் பூங்கா, விளையாட்டு மைதானப் புனரமைப்புப் பணிகளுக்கு 98 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டமாக - நீதிமன்ற வளாகம், தொழிலாளர் குடியிருப்பு, அரச திணைக்களங்களுக்கு கட்டடம் அமைக்க இருக்கும் இடம் என்பனவும் புனரமைக்கப்படவுள்ளன. (29)

# தொண்டமானாறு செல்வச்சந்நிதி வீதி வெளிநாட்டு உதவியுடன் புனரமைப்பு

நவிண்டில்

தொண்டமானாறு - செல்வச்சந்நிதி ஆலயத்தைச் சூழ்ந்துள்ள வீதிகள், வெளிநாட்டு நிதியுதவியுடன் பருத்தித்துறை வீதி அபிவிருத்தி திணைக்களத்தால் புனரமைக்கப்பட்டுவருகிறது.

சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் வங்கியின் நிதியுதவியுடன் - சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை 'மீட்டெடுத்தலும் மீள் எடுத்தலுக்குமான' திட்டத்தின்கீழ் ஆலய தேரோடும் வீதி உட்பட, மூன்று வீதிகள் புனரமைக்கப்பட்டுவருகின்றன.

இந்த ஆலயத்தின் வருடாந்த உற்சவம் எதிர்வரும் 5 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதால், வீதிப் புனரமைப்பு வேலைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (116)

## புலமைப்பரிசில் முன்னோடிப் பரீட்சையில்

# கூடிய புள்ளிகளைப் பெற்றோருக்கான பரிசளிப்பு விழாவும், கலை நிகழ்வும்!

சுதுமலை

சண்டிலிப்பாய் அதிபர் சங்கம், மானிப்பாய் பிராந்திய மக்கள் வங்கி தலைமை அலுவலகத்தின் அனுசரணையுடன் நடத்திய புலமைப்பரிசில் முன்னோடிப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வும், கலைநிகழ்வும் எதிர்வரும் 8 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் -

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் பிரதம விருந்தினராகவும், வலிகாமம் வலய ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் மாதவகுமாரன், மக்கள் வங்கி மானிப்பாய் உதவிப் பொதுமுகாமையாளர் சிவபாத விருதயர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஜூலை மாதம் 30 ஆம் திகதி இடம்பெற்ற தரம் 5 புலமைப் பரிசில் முன்னோடிப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கே பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (91)

## மானிப்பாய் பரிஷ் லியோ கழகத்துக்கு தலைவர் தெரிவு

சுதுமலை

மானிப்பாய் பரிஷ் லியோ கழகத்துக்கு - 2005/2006 ஆம் ஆண்டுக்கான புதிய தலைவர் தெரிவு அண்மையில் இடம் பெற்றது. இதில் நடப்பாண்டின் புதிய தலைவராக எஸ்.நந்தசீலன் தெரிவுசெய்யப்பட்டார்.

இதேவேளை, மானிப்பாய் பரிஷ் லியோ கழகத்தால் மானிப்பாய் பிப்பிலி சேமக்காலை - சிரமதானமூலம் துப்புரவு செய்யப்பட்டது. (91)

## வென்னப்புவ உதைபந்தாட்ட போட்டியில் யாழ்.மாவட்ட அணியும் பங்கேற்பு!

சுதுமலை

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் 15 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியை இந்த மாதம் நடத்தவுள்ளது. வென்னப்புவவில் இடம்பெறவுள்ள போட்டிக்கு யாழ்.மாவட்ட தெரிவு அணி பங்கேற்கவுள்ளது.

யாழ்.மாவட்ட பாடசாலைகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட - தெரிவு அணிக்கான பயிற்சிகளும், காட்சிப் போட்டிகளும் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறும். எதிர்வரும் 05,06,07 ஆம் திகதிகளில் போட்டிகள் இடம்பெறுமென, யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட சங்கத் தலைவர் கிளிபேட் அன்ரனிப்பிள்ளை தெரிவித்தார். (91)




# அக்கா

சிறுகதை

முத்துலிங்கம்

நாங்கள் எல்லாரும் வெறும் மேலுடன்தான் திரிவோம். எனக்கு வெறும் மேல்தான் பிடிக்கும்; சட்டையை பிடிக்கா. கிட்ணனும் அப்பிடித்தான்; வெறும் மேலுடன்தான் வருவான். ஆனால் கிட்ணன் நல்ல வடிவு. வெள்ளையாய் இருப்பான். ஏனென்டால் அவன் அம்மா நல்ல வெள்ளை; என்னுடைய அம்மாகூட நல்ல வெள்ளை; அப்பாதான் கறுப்பு; பல்லுத் தீட்டுவமே கரி. அதைப்போல -

சனிக்கிழமை அம்மா முழுக வார்ப்பா. அம்மாவுக்கு ஒண்டுமே தெரியா. இவ்வளவு எண்ணெய் வைப்பா. கண்ணெல்லாம் எரியும். அக்கா எண்டால் ஒரு சொட்டுச் சொட்டாய் வைப்பா. எரியவே மாட்டுது?

ராசா என்னோடு ஒட்ட ஒட்ட வாறான். தள்ளடா எண்டாலும் தள்ளுறான் இல்லை; ராசாவும் இண்டைக்கு முழுகுவான்; அவனுக்கு முழுகவே பிடிக்கா. ‘கெற்றப்போல்’ அடிக்கத்தான் அவனுக்குப் பிடிக்கும்; நல்லா லக்கு வைச்சு அடிப்பான்; எண்டால் நானும்கூட அடிப்பன்; அப்பா கண்டால் முதுகுத்தோலை உரிச்சுப் போடுவாராம்; அக்காதான் சொல்லுறா.

அப்பாவுக்கு ஒண்டுமே தெரியா; காலம்பற காலம்பற புதுப்புதுப் பிளேட்டால ‘சேவ்’ எடுத்திட்டு, பிளேட்டை எறிஞ்சிடுவார். நான் எல்லா பிளேடும் சேர்ப்பன். விக்னாவிட்டை குடுத்தால், புதுப் புது முத்திரை எல்லாம் தருவான். அவனிட்ட முத்திரை ஒரு தொகை இருக்கு. அமெரிக்கா, லண்டன் எல்லா முத்திரையும் வைச்சிருக்கிறான். விக்கினா வினர அப்பா விட்டை கார் இருககு; பெரிய கார்; அவன் சொல்லுறான் தான் கார் விடுவானாம். அவன் அப்பிடித்தான்; எல்லாம் பொய் பொய்யாய்ச் சொல்லுவான்.

லைசென்சு ஒண்டும் எடுக்காமல் எப்பிடியாம் கார் விடுறது.

அக்கா வந்து முழுகவார்க்கக் கூப்பிட்டா, “பேந்து வாறன்” எண்டு சொன்னன்; அக்கா அப்பிடியே ‘அறுநாக்கொடியில்’ பிடித்து கொற கொற எண்டு இழுத்துக்கொண்டு போனா. நான் அழவே இல்லை. எனக்கு அக்கா எண்டால் விருப்பம்.

அக்காதான் தலையிலே சீயாக்காய் பிரட்டினா; நான் அக்காவையே அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்தன. அக்கா நல்ல வடிவு. நல்ல சிவப்பு. அக்காவின்ர கண் வட்டமாய், பெரிசாய் இருக்கும். அதைத்தான் நான் உத்துப் பார்த்துக் கொண்டே இருப்பன். அக்கா ஏண்டா அப்பிடிப் பார்க்கிறாய் எண்டா. எனக்குக் கூச்சமாயிருந்தது. கண்ணுக்குள்ளே சீயாக்காய் போட்டுது எண்டு கத்தினேன், சும்மாதான்; அக்கா கெதி கெதியாய் தண்ணி அள்ளித் தலையிலே ஊத்தினா. தண்ணி சில்லெண்டு இருந்தது; நான் குதி குதி எண்டு குதிச்சன்.

அம்மா பவுடர் போடவே மாட்டா. கொஞ்சம்தான் போடுவா. அக்கா எல்லா இடமும் பவுடர் போட்டா. தலையெல்லாம் கூடப் போட்டா. நல்ல வாசமாயிருக்கு. நான சிரிச்சன். அக்கா குனிஞ்சு கொஞ்சினா.

கிட்ணன் வந்து விளையாடக் கூப்பிட்டான். “நான் மாட்டன் நீ போ” எண்டு சொன்னன். அவன் போக இல்லை.

“நீ போடா” எண்டு நான் உள்ளே வந்திட்டன். கிட்ணன் அப்பிடித்தான், “போடா” எண்டால், போகவேமாட்டான்.

கிட்ணன்ரை அக்காவும் வந்தா. எங்கட அக்காவோடை அவ கனக்க நேரம் கதை கதை எண்டு கதைச்சா. மெதுவாகத்தான் கதைச்சினம். என்னைக் கண்ட உடனே கதைக்கிறதை நிப்பாட்டினம். அக்கா “நீ போய் வெளியிலே விளையாடன்டா” எண்டு என்னைக் கலைக்கிறா. எனக்குக் கோவம் கோவமாய் வரும்.

கிட்ணன்ரை அக்கா கூடாது. வந்தாப் போகவே மாட்டா. ரெண்டு பேரும் சேர்ந்து சிரி சிரி எண்டு சிரிக்கினம். சிரிச்சிட்டுப் போகட்டும்; எனக்கென்ன.

கிட்ணன்ரை அக்காவின்ரை நகையெல்லாத்தையும் அக்கா போட்டுப் போட்டுப் பார்த்தா. அம்மாவின்ர சீலையெல்லாம் அலுமாரியிலை இருந்து எடுத்து, அக்கா உடுத்துப் பார்த்தா. கண்ணாடியிலை அக்கா தன்னைப் பார்த்துக்கொண்டேயிருந்தா. ஏனெண்டு கேட்டன். “அப்பிடித்தான்” எண்டு சொன்னா.

இந்த அக்கா இப்படித்தான்; கிட்ணன்ரை அக்கா வந்தா என்னோடை கதைக்கவே மாட்டா. நான் குசினிக்குப் போய் குஞ்சியாச்சியைக் கேப்பன்.

குஞ்சியாச்சி குசினியிலே பலகாரம் சுட்டுக்கொண்டு இருந்தா. எனக்குச் சாப்பிட இவ்வளவு பலகாரம் தந்தா. நான் இதை அம்மா விட்டை சொல்லமாட்டன். குஞ்சியாச்சியை எனக்குப் பிடிக்கும்; எனக்குக் கேக்கிறது எல்லாம் சொல்லுவா. அக்காவைப் பொம்பிளை பார்க்க வருகினமாம். இந்தப் பலகாரம் எல்லாம் அவைக்குத்தானாம்!

குஞ்சியாச்சி நல்லவ. என்னைக் கொஞ்சிறபோதுமாத்திரம் கூடாது. அவ வாயெல்லாம் வெங்காயம் மணக்கும். அக்கா மெதுவாத்தான் கொஞ்சுவா. கன்னம் பட்டுப்போல இருக்கும். ஆனா அப்பா முகம் குத்தும். சொரசொர எண்டு இருக்கும். பள்ளிக்கூடத்திலே சிலேட்டுப் பெஞ்சில் தீட்டுவமே சீமெந்து படி. அதைப்போல.

எனக்கு அப்பாவைப் பிடிக்கா. வெள்ளிக்கிழமை மாத்திரம் பிடிக்கும். ஏனெண்டால் என்னைக் கோயிலுக்குக் கூட்டிக்கொண்டு போவார். கனக்கக் கடலையெல்லாம் வாங்கித்தருவார்.

இண்டைக்கு எனக்குப் புதுச் சேட்டையெல்லாம் அக்கா போட்டுவிட்டா. புழுதியிலே இறங்கி விளையாடினால், கால் முறிச்சுப் போடுவேன் எண்டு அக்கா சொன்னா.

எல்லாம் பொய். அக்கா அடிக்கவே மாட்டா; மெதுவாகத்தான் அடிப்பா.

அக்கா, அக்கா, அக்கா எல்லே, குஞ்சியாச்சியிட்டைக் கொஞ்சம் பலகாரம் வாங்கித்தா எண்டு கேட்டன். அக்கா, இப்ப வேண்டாம். அவையெல்லாம் வந்து போனப்பிறகு சாப்பிடலாமெண்டு சொன்னா. ஆரெல்லாம் எண்டு கேட்டன். அக்காவுக்கு முகம் எல்லாம் சிவந்து போச்சு.

அக்கா புது சீலையெல்லாம் கட்டிக் கொண்டிருந்தா. அக்கா நல்ல வடிவு. நான் கட்டிப் பிடிச்சு அக்கா கழுத்திலே கொஞ்சினன், சீ... அப்படி நீ கொஞ்சக்கூடாதெண்டு சொன்னா.

குஞ்சியாச்சி எண்டா அப்பிடிச் சொல்லவே மாட்டா. லெச்சுமி இண்டைக்கு வர இல்லை.

ஏன் குஞ்சியாச்சி லெச்சுமியைக் கூட்டிக் கொண்டு வர இல்லை எண்டு கேட்டன். உண்மையாகத்தான் கேட்டேன். குஞ்சியாச்சி சிரிச்சா. ஏன் நீயும் பொம்பிளை பார்க்கப் போறியோ எண்டு கேட்டா.

பொம்பிளை பார்க்கிறதெண்டால் என்ன?

புதுப் புது ஆக்களெல்லாம் வந்தினம்; ஒரு பென்னம் பெரிய கார்லே அவ்வளவு பேரும் வந்திருந்தினம். நான் அம்மாவின்ர சீலையைப் பிடிச்சிக்கொண்டு நிண்டன்.

அம்மா பறிச்சுக்கொண்டுபோய் அவை எல்லாரையும் கூப்பிட்டு உள்ளுக்கு இருத்தினா. ஒரு மாமிகூட வந்திருந்தா. நான் அக்காவோடை போய் இருந்தன். அக்கா என்னைத் தன்னோடு இழுத்து வைச்சிக்கொண்டா.

அக்கா புதுசு புதுசாய் நகையெல்லாம் போட்டிருந்தா. “இதெல்லாம் ஆற்றை நகையக்கா” எண்டு கேட்டன்; மெல்லத்தான் கேட்டன். “சீ பேசாமல் இரடா” எண்டா அக்கா. அந்த மாமி என்னை உத்து உத்துப் பார்க்கிறா.

அந்த மாமி கூடாது. ஆனா அக்கா அவவோடைதான் கதைச்சா; கனநேரம் கதைச்சா. பலகாரம் எல்லாம் கொண்டுபோய் வைச்சா.

முன் வீட்டிலே இருக்கிறாரே கொண மாமா, அவரைப்போல ஒரு மாமாவும் வந்திருந்தார். ஆம்பிளையள் எல்லாரும் தலைவாசலிலேதான் இருக்கினம்; அந்த மாமாவின்ர அப்பாவும் அங்கைதான் இருக்கிறார். அவைக்கும் அக்காதான் பலகாரம் குடுத்தா. அந்த மாமா அக்காவையே பார்த்தார். அக்கா ஓடியந்திட்டா.

அந்த மாமா என்னைக் கூப்பிட்டார். கை காட்டித்தான் கூப்பிட்டார். நான் போகவே இல்லை. அப்பா, வாடா எண்டு உலுக்கினார். நான் பயந்திட்டன்.

அப்பாவும், அந்த மாமாவின்ர அப்பா, அவரும் கதைச்சினம். இருந்திட்டு இரண்டு பேரும் பிலத்து சத்தம் போட்டினம். கடைசியாய் அப்பா கோபமாய்ப் பேசினார். அம்மா அப்பாவைப் பேசவேண்டாம் அப்படி எண்டு சொன்னா. அக்கா அழுகிறதுபோலை சோர்ந்து போய் இருந்தா. பாவம் பாவமாயிருந்தது.

நான் முறுக்கை எடுத்துக் கடிச்சன்; மெதுவாத்தான் கடிச்சன். படக்கெண்டு சத்தம் போட்டது. அந்த மாமா திரும்பிப் பார்த்தார். எனக்கு வெக்கமாய்ப் போச்சு...

இண்டைக்கு வகுப்பு வாத்தியார் வர இல்லை. எல்லாரும் சத்தமாய்ப் போட்டம். பற்பன்தான் கூடச் சத்தம் போட்டான். ஆனா தலைமை வாத்தியார் எல்லாரையுந்தான் வாங்கு மேலே ஏத்திவிட்டார்; காலெல்லாம் வலிச்சுது. தலைமை வாத்தியார் உயரமாய் இருப்பார். பிரம்பு வைத்திருப்பார்; அவருக்கு ஒண்டுமே தெரியாது.

பள்ளிவிட்டநேரம் மழை எல்லாம் தூறிச்சு. “மழையே மழையே மெத்தப் பெய், வண்ணாங் கல்லு தூரப்பெய்” எண்டு நானும் கிட்ணனும் பாடினோம். மழை பெய்யவே இல்லை.

“கொக்குவில் கிராமச் சங்கம்” எண்டு பலகையிலே எழுதி வைச்சிருக்குது. “ஏணடா கிட்ணா, கிராமச் சங்கம் எண்டா என்னடா” எண்டு கேட்டன். அவன் தனக்குத் தெரியாது எண்டு சொல்லிப்போட்டு ஓடிவிட்டான். கட்ணனுக்கு ஒண்டுமே தெரியா.

வீட்டிலே அம்மா அப்பாவோடு சண்டை பிடிச்சா, அப்பாவும் பெலத்துச் சண்டை பிடிச்சார். எனக்குப் பயமாயிருந்தது. அக்காட்டை ஓடினேன். அக்கா கூடத்திலே இருந்து அழுதுகொண்டு இருந்தா. ‘அக்கா அக்கா’ எண்டு கூப்பிட்டன்; அவ பேசவே இல்லை. சீதனம் சரியாய்ப் பேசாமல் ஏன் பொம்பிளை பாரக்க ஆக்களைக் கூப்பிடுவான் எண்டு அம்மா கத்தினா. அப்பாவும் என்னவோ கத்தினார்.

எதுக்குத்தான் சண்டை எண்டு ஒண்டு இருக்குதோ?

மண்ணெண்ணெய்க்காரன் வந்தான். கூ கூ எண்டு ஊதினான். நான் அவனைப் பார்க்கத்தான் ஓடினேன். ஒழுங்கையிலே கொண மாமாவும் நிண்டார். என்னைப் பார்த்துச் சிரித்தார். கொண மாமா நல்ல வடிவாய் இருக்கிறார்.

கொண மாமா, “நீ என்ர வீட்டுக்கு வாறியா” எண்டு கேட்டார். நான் ஓம் எண்டு தலை ஆட்டினன்.

கொண மாமா பெரிய பெரிய புத்தகமெல்லாம் படிக்கிறார். எல்லாம் இங்கிலீசு புத்தகம். எல்லாமும் கூடாது. ஒரு படம்கூட இல்லை.

படம் ஒண்டுகூட இல்லையா எண்டு கேட்டன். படமா எண்டு கொண மாமா சிரிச்சார். புதுசு புதுசா படம் எல்லாம் காட்டினார். அந்தப் பெட்டி நிறையப் படம் படமாய் வச்சிருக்கிறார். மாடு படம், குதிரை படம், ஏரோப்பிளேன் படம் எல்லாம்கூடக் கீறி வச்சு இருக்கிறார். என்ர படம், அக்கா படம்கூடக் காட்டினார்.

அக்கா படத்தை அக்காவுக்குக் காட்டிப் போட்டு வரட்டா எண்டு கேட்டன். “ஓ... வேணுமெண்டால் கொண்டுபோய்க் காட்டு; ஒரு கடுதாசியும் தாறன். அதையும் காட்டுறியா” எண்டார்.

நான் “ஓ யேஸ்” எண்டன்.

அம்மா வெங்காயம் வெங்காயமாக உரிக்கிறா. அவவுக்குக் கண்ணீரே வர இல்லை. நான் ஒண்டு கூட உரிச்சு முடியல்லை. அழுகை அழுகையா வந்தது. அப்பா இஞ்ச வாடா எண்டு கூப்பிட்டார். நான் கிட்டப் போனேன். முதுகிலே ‘பளார் பளார்’ எண்டு அடிச்சார். அதுக்கிடையிலே அம்மா ஓடிவந்து, அப்பாவை மறிச்சா. அப்பா, நீதான் பிள்ளையைக் கெடுக்கிறாய் எண்டு பேசினார்; அம்மா, அவனுக்கென்ன தெரியும். குழந்தைதானே எண்டா. இனிமேல் மாமா வீட்டை போவியாடா, போவியாடா எண்டு உலுக்கினார். நான் இல்லை இல்லை எண்டு பயத்தில கத்தினன். அப்பா உடனே போட்டார். அம்மா முதுகைத் தடவி விட்டா, பலகாரம் எல்லாம் கூடத்தந்தா.

நடுச்சாமம் போல அப்பா அடிக்க வந்தார். நான் திடுக்கிட்டு முழிச்சிப் பார்த்தன்; ஒண்டுமே தெரிய இல்லை. எனக்குப் பயம் பயமாய் வந்தது. இருட்டிலே அக்காவிட்ட தடவித் தடவிப் போனேன். அக்காவின்ர தலைகாணி எல்லாம் ஈரமாயிருந்தது. அக்கா விக்கி விக்கி அழுகிற சத்தம்தான் கேட்டது. எனக்குப் பயமாயிருந்தது.


அக்காவைத் தொட்டுப் பார்த்தன். அக்கா முகத்தைக் காண இல்லை. ஏன் அக்கா அழுகிறாய் எண்டு கேட்டன். அக்கா கதைக்க இல்லை. “அக்கா, என்ர அக்கா எல்லே... இனிமேல் அந்த மாமாட்டையிருந்து ஒரு கடுதாசியும் வாங்கியர மாட்டன்; என்ர அக்கா எல்லா.”

அப்பவும் அக்கா கதைக்க இல்லை. “எனக்குப் பயமாயிருக்கு அக்கா... என்னைக் கட்டிப்பிடி அக்கா...” எண்டு சொன்னன்.

அக்கா குப்புறப்படுத்துக் கிடந்தா; திரும்பவே இல்லை. தடவிப் பார்த்தன். முகமெல்லாம் நனைஞ்சி கிடந்தது.

“அக்கா, நீ என்னோடை கோவமா” எண்டு கேட்டன்.

அக்கா அப்படியே என்னைக் கட்டிப் பிடிச்சுக் கொஞ்சினா. கன்னத்திலேதான் கொஞ்சினா. கொஞ்சம் நொந்தது. ❄



# நூல் அகம்




நூலின் பெயர் - இனிவசந்த காலம் (சிறுகதைத் தொகுப்பு)

நூல் ஆசிரியர் - எஸ்.பி.கிருஷ்ணன்

வெளியீடு - கண்ணன் வெளியீடு

போர் மேகங்கள் சூழ்ந்த பேரினவாத அடக்குமுறைச் சூழலில், தமிழ்மக்கள் பட்ட அவலங்களை சித்தரிக்கும் பதிவேடுகளில் ஒன்றாக தமிழீழ இலக்கிய வரலாற்றுப் பரப்பில் இந்த நூல் தனக்கென ஒரு இருப்பிடம் பிடித்துள்ளது என்றால் அது மிகையாகாது.

எழுத்துக்காக உணர்வுகளை உருவாக்கும் தற்கால இலக்கியக் கலாசாரத்தில், உணர்வுகளின் வெளிப்பாட்டுக்கு உருவம் கொடுத்த நூலாக இந்த நூல் விளங்கு கிறது. தமிழ் மகனாகப் பிறந்து, இந்த மண்ணில் தான்பட்ட அவலங்களை பாத்திரப்படைப்புகளால் வடிவமைத்து, உரமான வரிகளால் உணர்வூட்டி, வாசிப்பவர் உள்ளம் குமுறியள வைத்துள்ளார் இந்தப் படைப்பில்.

எஸ்.பி.கிருஷ்ணனின் நான்காவது தொகுதியாக வெளியிடப்படும் இந்தப்படைப்பு - 1965 ஆம் ஆண்டு 'ஈழநாடு' பத்திரிகைப் பிரசுரம் முதல் 2005 ஆம் ஆண்டு 'நமது ஈழநாடு' பத்திரிகைப் பிரசுரம் வரை 29 கதைத்தொகுப்புகளை உள்ளடக்கியுள்ளது. இந்தக் கதைகளை நகர்த்துவதற்கு கிருஷ்ணன் கையாண்ட மொழி நடையானது - பாமரர் முதல் படித்தவர் வரை விளங்கிக் கொள்ளக் கூடியது. இது பத்திரிகைப் படைப்பு என்பதால், இந்த நடையில் இவர் அக்கறை காட்டியிருக்கலாம். அத்தோடு கருவை நெகிழ்த்தாது கூறுகின்ற பாங்கும் இந்தப் படைப்பில் போற்றுதற்குரியது. தமிழுணர்வு முதல் தரணி வாழ்க்கை அவலங்கள் வரை பல விடயங்களைத் தனது கதைக் கருவாகக் கொண்டுள்ளார். அவதானிப்பின் ஊடாக, ஆழமான உணர்வலைகளைத் தொடுக்கின்ற பாங்கு, கதையோட்டத்தைச் சோரவிடாது கருவோடு இணைக்கின்ற பாங்கு அனைத்தும் சிறுகதை வரைமுறைக்குள் இருந்து படைப்பை வடிவமைக்கிறது.

பிறந்த மண்ணை விட்டு, ஒரே இரவில் அயல்நாடு புகுந்த அவலநிலைகளை, துன்பத்தின் விளிம்பிலிருந்து விம்மி விம்மி வடித்துள்ளார். சேர, சோழர் பரம்பரையில் வந்து, செந்தணல் நெஞ்சில் பாயச் செய்த சமர்வீரம் கொண்ட தமிழன் தன்மானமிழந்து, தலைகுனிந்து தன்னுயிரைக் காக்க தத்தளித்து ஓடிய வரலாறுகளின் பதிப்பை வருங்காலம் பார்க்க வடிவமைத்துள்ளார் இந்தப் பதிப்பில்.

எமது தமிழ் இனத்துக்கு வந்த சோதனைகள் - எந்த இனத்துக்கும், உலகத்துக்கும் நேர்ந்திருக்காது என ஒரு கணம் பார்ப்போர் மனதை சிந்திக்க வைக்கின்ற வகையில், பல பாத்திரப்படைப்புகளை பக்குவமாகப்புகுத்தி, மனக்கண்ணில் மானத்தமிழன் அன்றுபட்ட துன்பத்தை உணரக்கூடிய வகையில், கதைப் போக்கை நகர்த்துகின்றார் எஸ்.பி.கிருஷ்ணன்.

படைப்பின் வெளிப்பாட்டுக்காகப் பக்குவம் பார்க்கும் தற்கால நூலாசிரியர் வரிசையில், தமிழன் தத்தளித்த அவலங்களைக் காட்ட தன் படைப்பைத் தானமாக்கியிருக்கிறார் இந்த நூலாசிரியர். அந்த வகையில் தமிழன் தலை தாழ்த்தி, தன் வரலாற்று வெளிப்பாட்டுக்காக நன்றி சொல்ல வேண்டிய ஒரு படைப்பு இந்த நூல் என்றால் மிகையாகாது.

~ ஆர்.கே.மேனன்.

# நிலையில்லாத உருவம்

கருகுகின்றபோது வெயில் எரிகிறது. நனைந்து விட்டபின் மழை கொட்டுகிறது. தூரத்து மின்னல் கண்ணைப் பறித்து மழைக்காக ஆரம்பமான போதும், அதில் நனைந்து விடுகின்ற எல்லோரும் உணர்ந்து கொள்கின்ற அளவாக வானம் இல்லாத போதுதான் மீண்டும் மீண்டும் மழை வந்து எங்களை நனைக்கிறது.

கோபம் கொள்ளும்... சினம் கொண்டு தாங்கிக் கொள்ள மனமில்லாமல் நனையும் போது, குளிர் வந்து தடுத்து விடுகின்ற போர்வைக்குள் .... அன்றைய நாள் வில



கிக்கொண்டு மழைக்கு நனையாது ஒதுங்கிக் கொண்டாலும், தொடர்ந்தும் கொட்டிக்கொண்டே இருக்கிறது.

அழகு சேர்க்கும் வட்டத்து நிலவு தெரியும் எனது அறையில், கூரை இடுக்கால் ஒரு துவாரம் மழைக்காக ஆனதால், பிடிக்காமல் போன போதும் மழை நின்றதும் அடிக்கடி நிலவு எனது வீட்டுக்குள் வந்திறங்கும்.

எனது ஊர்க்கோயில் மணி ஓசையில், எனது வீடு காலை கொள்ளும். மக்கள் நடமாட முன்னர் எனது வீதி கோலம் போடும். சூரியனுக்கு மட்டும் அதிகாலை மாலை பிடிக்காது. ஒவ்வொரு நாளும் எனது ஆயுள் நாட்களை குறைக்கிறது. சுவரில் தொங்கவிட்ட நாட்காட்டி.

குளித்துவிட்டு அழுக்குக்காக பயணிக்கிறேன் ... நீண்ட பாதை குறுகிய வீதி எல்லாத் தேவைகளுக்காகவும் எல்லோரும் ஒன்றாக விலகிய படி.

ஓடி...ஓடி... பாதை இரு மருங்கிலும் களைப்பாறும் போதும் போய்ச்சேரவேண்டிய இடம் போய்ச்சேர்ந்த பின்னும் களைப்பு ஆறுதலுக்குத் தான் முதல் இடம் கொடுக் கிறது.

ஆனாலும் மீண்டும் மீண்டும் நம்பிக்கையில் நகருகின்ற போது எங்கள் ஊர்த்தெரு எல்லோரையும் நடக்க விடுகிறது.

நினைத்துப் பார்த்தல் என்பது- சத்தமில்லாமல் அந்த இடங்களில் உலாவும் போது, உதிர்ந்த சருகுகள் காலடியில் மட்டும் சலசலப்பு கேட்டுக்கொண்டே இதயத்தை தொலைதூரம் அனுப்பிவிட்டு, மீதி நாட்களையும் கடந்து செல்லத் தூண்டிவிடுகின்ற ஒளியில் இருளே காணாமல் போகும் இடைவெளிக்குள் அணைந்து விடும் துன்பங்கள் எல்லாம் இன்பங்களுக்கான போதும் சில நேரங்களில் நினைத்துப் பார்க்காமல் போய்விடுகிறது.

இயற்கையான சூழலில், பழக்கப்பட்ட விடயங்களுக்குள் சம்பவங்கள் இன்பமானபோது, திருவிழாவாகவும் துன்பமானபோது, அஞ்சலியாகவும் இடம் பெறுகின்ற போது எதிர்பார்க்க முடியாமல் வரையறைக்குள் நின்று வாழும் பழக்கம் மட்டும் எல்லோரிடமும் இருக்கிறது.


பார்வையாளன் நான் என்னை அடையாளம் காட்டாதே, நீண்ட வரிசையில் எனக்கான எதிர்பார்ப்பில்லாமல் இருக்கிற போது என்னை படம் பிடிக்காதே.

நிழலின் கருமை நிலம் சாயும் போதும் நகருகின்றது. எனது உயரத்தை அளவெடுக்க முடியாமல் கூடியும், குறைந்தும் பொய்ப்பிக்கின்ற போது தான் நான் அல்ல நிழல் உயிரானது.

வீட்டுவாசல் கிழக்கே பார்க்கிறது. மறையும் போதும் ஒருவாசல், இருவாசல் அல்ல, நிறைய வாசல் கொண்ட வீடு இது. உடைக்கப்பட வேண்டியது வீட்டையல்ல எனது இருப்பிடத்தை.

வேலைத்தள வாசலில் கால் துடைக்கப் போட்டிருந்த துணிமேல் வெல்க்கம் என்று எழுதியிருந்தது. உள்ளே சென்று திரும்பிவரும் போது துணியைப் பார்த்தேன். தலைகீழாகத் தெரிந்தது எழுத்தல்ல.

மன இறக்கைகள் பறக்கின்ற செயல் அதிகம் காணப்படுகின்ற போது, விட்டுச்சென்ற சிறகுகளை எண்ணிட முடியாதபோது இரண்டு சிறகுகள் தான் இருப்பதாக



உத்தேசம். ஆனாலும் பறக்கின்றபோது தான் அந்தரம். நடுவானம் மேலேயும் கீழேயும் பார்க்க முடியாமல் மிச்சமாகவுள்ளது.

நெருக்குதல்களில் அடங்கிப்போதல் என்று பொறுமையாக இருத்தலைக் காட்டுகின்ற செயற்பாடுகளில் விடுவிக்கமுடியாமல் இருத்தல் மேலோங்கி இருக்கின்ற போது, இந்தச் சூழலில் முற்றுப்புள்ளியில் கனம் அதிகமாகி விடுகிறது.

செல்வா

# ஒரு தேவதையின் ஒளிக்கவிதை

ஒரு தேவதை
திடீரென எனக்குள்
இறங்கினாள்

விழிமலர்த்தி
விழிபார்த்தேன்
அத்தேவதையின்
பிம்பங்களின் பிரகாசத்தோடு
வீதி நிறைந்திருந்தது



அசரீரியாய் அவளுதிர்க்கும்
வார்த்தைகள்
செவியடைந்து என்னைக்
கவியாக்கத் துடித்தன

ஒப்பனைகளை
ஓரமொதுக்கி....
என்னைப் புதுக்கியெடுத்து
தன் ஒளிக்கரங்களால்
ஆசீர்வதித்தாள்

அவளின் ஆசீர்வாதத்தில்
ஆர்ப்பரித்து.... ஆனந்தித்து
என் அறைச் சுவரெங்கும்
கவிதைகள் எழுந்தன

எனக்குள் இறங்கிய தேவதை
இப்போது
என்னவானாள் என்பது
தெரியவில்லை

எனினும்
அவள் நினைவாய்க்
கவிதை இருக்கிறது.

தவிநேசன்

* * *

# தாகம்

போதும் நிறுத்துங்கள்
உங்களால் முடியாது
எங்கள் வரட்சியைப் போக்க!

கால்கள் இடறுகின்றன
நா உலர்ந்து விட்டது
தாகமாய் இருக்கிறது
சொட்டுத் தண்ணீரும்
தருகிறீர்களில்லை.

உங்கள்....
மனங்களில் கூட ஈரமில்லை
எப்படி உங்களால் முடியும்
எங்கள் வரட்சியைத் தணிக்க.

வேலணையூர் சுரேஷ்.



# போராட்டம்

எல்லாம் பேசியாயிற்று
பேசுவதற்கு இனி ஒன்றுமில்லை
பேச்சு மேசைகளுக்கும்
நாற்காலிகளுக்கும்....
விளங்கியதளவிற்கு
அற்ப சொற்பமும் கூட
உனக்கு விளங்கவே இல்லை
பின் பேசித்தான் என்னபயன்?

இனி உன்னிடம்
பேசுவதற்கு எம்மிடம்
ஒன்றுமில்லை
பேசிப் பேசியே நாம்
களைத்துப் போய் விட்டோம்
ஆனால் ஒருபோதுமே
நாங்கள் போராடிக் களைத்ததில்லை
வாழ்க்கையே எமக்கு
போராட்டம் தானே!

# சலுகைக்காக நாம் போராடவில்லை உரிமைக்காகவே போராடுகின்றோம்

## முல்லைத்தீவு அரசியற்துறைப் பொறுப்பாளர்

முல்லைத்தீவு—

யுத்த காலத்தைவிட - சமாதான காலத்தில்தான் நாம் பெரும் இழப்புக்களைச் சந்தித்துள்ளோம் என - முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தேசிய எழுச்சிப் பேரவையின் மாநாட்டு மண்டபத்தில் சமகால அரசியல் நிலைப்பாடு தொடர்பான கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

யுத்தநிறுத்தம் ஏற்பட்டு மூன்று வருடங்களுக்கு மேலாகியும் எமது மக்களுக்கு எந்தவிதமான முன்னேற்றமான செயற்பாடுகளும் செய்யப்படவில்லை.

சமாதான சூழல் உருவாக்கப்பட்டு பேச்சுக்கள் நடைபெற்ற பல்வேறு அமைப்புகள் உருவாக்கப்பட்டபோதும் எதுவும் நடக்கவில்லை.

இதன் பின்னர் ஏற்பட்ட சுனாமி - எம்மால் எண்ணிப் பார்க்கமுடியாத அளவுக்கு சேதத்தை உண்டாக்கியுள்ளது.

இந்த நிலையில்தான் பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. ஆனால், இதன்மூலம் கிடைக்கப்போகும் உதவிகள் எதனையும் சிங்கள தேசம் எமக்கு தருவதாக இல்லை. ஆனால், தற்போது அவை எல்லாம் செயலிழந்துவிட்டன.

பாண்டவர்கள் போல எமது உரிமைக்காகப் போராட வேண்டும். அவர்கள் கேட்டதைப் போல ஐந்து வீடுகளைக் கூடத் தருவதற்கு இலங்கை அரசு தயாராக இல்லை.

இந்தச் சமாதான காலத்திலும் கூட 150 இற்கும் மேற்பட்ட போராளிகளை நாங்கள் இழந்துள்ளோம். பொறுப்பாளர்கள், தளபதிகளை இழந்துள்ளோம். அவர்களை மட்டுமல்ல எமது நாட்டுச் சொத்தான கடல் வளங்களையும் இழந்த நிலையில் உள்ளோம். கடற்தொழிலாளர்கள் சுதந்திரமாகச் சென்று தொழில் செய்ய முடியவில்லை. இதனை நினைக்கும்போது மிகவும் வேதனையாகவுள்ளது.

எமது மக்கள் சலுகைகளுக்காகப் போராடவில்லை, உரிமைகளுக்காகத்தான் போராடுகிறார்கள்.

எமது மக்களின் எழுச் சியை நாம் சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக் கூறிக்கொண்டேயிருக்கிறோம். இதனை சர்வதேசம் தான் உணர்ந்துகொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# விடுதலைப் போராட்டத்தில் மட்டுமன்றி விளையாட்டிலும் சாதனை படைக்க வேண்டும்!

## விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் தெரிவிப்பு

மன்னார்—

தமிழினம் ஈழப் போராட்டத்தில் மட்டுமல்ல - விளையாட்டுத் துறையிலும் சர்வதேச ரீதியில் புகழ் பெறவேண்டும் என்பதே எமது தேசிய தலைவரின் அவா ஆகும் எனத் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட விளையாட்டுப் போட்டியில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

எமது தேசத்தின் போராட்டம் ஒருபுறம் நடைபெற, சர்வதேச ரீதியிலும் எமது தமிழினம் கால்பதித்து எமது இனத்துக்குப் பெரும் புகழை ஈட்டித்தரவேண்டும் என்பதே எமது தலைவரின் பேரவாவாகும். இந்த வகையில் மன்னார் மாவட்டம் உதைபந்தாட்டத்தில் தலைசிறந்து விளங்குகிறது.

நாம் விளையாட்டை ஒரு பொழுதுபோக்காக அல்லாமல்- ஒரு தொழிலாக எடுத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் எமது மண்ணில் ஆரோக்கியான மனிதர்களைக் காணலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் வே. விஸ்வலிங்கம் தலைமையில் - மாந்தை மேற்கு உதவி அரசாங்க பிரிவில் உள்ள அடம்பன் மகா வித்தியாலய மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

இந்தப் போட்டிகளில் நானாட்டான், முசலி, மடு, மாந்தை மேற்குப் பிரதேச செயலக உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள வீரர் வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.



இதில் யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தின் மன்னார் பிரதிநிதி சுனில் தாப்பா பிரதம விருந்தினராகவும், மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எஸ்.இனியவன், வட- கிழக்கு மாகாண வவுனியா மன்னார் பிராந்திய ஆணையாளர் ஈ. ஐயாத்துரை ஆகியோர் கலந்து கொண்டனர்.

# இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

## ஓகஸ்ட் - 01

1778:- முதன்முதலாக சேமிப்பு வங்கி ஹாம்பர்க்கில் திறந்து வைக்கப்பட்டது.

1781:- சுழலும் விளக்கு அமைப்புடைய கலங்கரை விளக்கம் சுவீடனில் மொர்ஸ்ட்ராண்ட் என்ற இடத்தில் செயற்பட ஆரம்பித்தது.

1790:- அமெரிக்காவில் முதன்முறையாக சனத் தொகை கணக்கெடுப்பு முடிவடைந்தது. அப்போது அமெரிக்காவின் சனத்தொகை 39, 40, 000

1834:- பிரித்தானிய சாம்ராஜ்யம் முழுவதும் கொத்தடிமை முறை ஒழிக்கப்பட்டது.

1870:- கிரேக்கத்தின் தெற்குப் பகுதியில் அதிகாலை 2.45 மணிக்கு கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது. இருபது நிமிடங்கள் நீடித்த இந்த நிலநடுக்கத்தில் ஏராளமான கிராமங்கள் அடியோடு அழிந்தன. மூன்று வினாடிக்கு ஒரு தடவை நில அதிர்வு ஏற்பட்டது.

1873:- முதன்முதலாக கேபிள்கார் - சன்பிரான்சிஸ்கோவில் அறிமுகப்படுத்தப்பட்டது.

1883:- பிரிட்டனில் தபால்மூலம் பொதிகளை அனுப்பும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

1914:- ரஷ்யாமீது - ஜேர்மனி போர் தொடுத்தது.

1914:- முதலாம் உலக யுத்தத்தில் போரில் ஈடுபடாது நடுநிலை வகிக்கப்போவதாக இத்தாலி அறிவித்தது.

1931:- பிரித்தானிய அரசுக்கு ஏற்பட்ட பணப்பற்றாக்குறையைத் தீர்த்துக்கொள்ள அமெரிக்காவும், பிரான்ஸும் 2.5 கோடி பவுண்களை இங்கிலாந்து வங்கிக்குக் கொடுத்து உதவின.

1936:- பெர்லினில் நடந்த ஒலிம்பிக் போட்டிகள் முதன்முதலாக நேரடியாகத் தொலைக்காட்சிமூலம் ஒளிபரப்பப்பட்டது.

1944:- ஜேர்மனியில் தபால் குறியீட்டு இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

1955:- கடதாசிக் கூட்டுத்தாபனம் வாழைச்சேனையில் ஆரம்பிக்கப்பட்டது.

1956:- ஸாக் என்பவர் தயாரித்த போலியோ தடுப்பு மருந்து விற்பனைக்காக விடப்பட்டது.

1958:- கொழும்புத் துறைமுகம் தேசிய மயமாக்கப்பட்டது.

1966:- நைஜீரியாவில் இராணுவப் புரட்சி நடைபெற்றது. லெப்ரினன்ட் கேணல் கோவொன் ஆட்சியைக் கைப்பற்றினார்.

1967:- ஆர்பிட்டர் - 5 என்ற விண்கலம் சந்திரனை நோக்கிச் செலுத்தப்பட்டது.

1994:- இராணுவ ஆதரவுடனான ஹெயிட்டி அரசைப் பதவியில் இருந்து நீக்க அமெரிக்க படைகளை அனுப்ப வழி வகுக்கும் ஐ.நா.பாதுகாப்புச் சபையில் நிறைவேற்றப்பட்டது.

தொகுப்பு - சந்துரு

# முல்லைத்தீவு மாவட்டத்தில் மீனுக்கு பெரும் தட்டுப்பாடு!

புதுக்குடியிருப்பு—

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமிக்குப் பின்னர் மீன்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதுடன் - விலையும் அதிகரித்துள்ளது.

இந்த மாவட்டத்தில் மீன்பிடியில் ஈடுபட்டுவந்த மீனவர்களின் மீன்பிடி உபகரணங்கள் முழுவதும் அழிந்துபோயுள்ளன. சுனாமிக்குபின்னர் கடற்தொழிலாளருக்குத் தேவையான மீன்பிடி உபகரணங்கள் கிடைக்கவில்லை. இந்த உபகரணங்களைப் பணம்கொடுத்து வாங்கும் நிலையில் இந்தப் பகுதி மக்கள் இல்லை. இவர்கள் முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறான பல காரணங்களினாலேயே இன்று மீனுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

இலங்கையில் மீன்வளம் அதிகளவிலுள்ள மாவட்டங்களில் முல்லைத்தீவும் ஒன்றாகும்.

ஆனால், இன்று இந்த மாவட்டத்திலே மீனுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமை மிகவும் வேதனைக்குரிய விடயமாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(வெ)



வட்டக்கச்சி கட்சன் வீதியில் அமைக்கப்பட்ட அமரர் மகேந்திரவதனனின் ஞாபகார்த்த அறிவாலய திறப்பு விழாவில் மங்கள விளக்கை தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றுவதைப் படத்தில் காணலாம்.

(படம் - வட்டக்கச்சி செய்தியாளர்)

# ஆசிரியர்களுக்கான நட்புதவியாளர் பயிற்சிநெறி இறுதிநாள் நிகழ்வும், சான்றிதழ் வழங்கலும்!

புதுக்குடியிருப்பு—

ஆசிரியர்களுக்கான நட்புதவியாளர் பயிற்சி மற்றும் உளவளத் துணை உளவியல் பாடப் பரப்பாகக்கொண்ட செயற்பாட்டுப் பயிற்சியின் நிறைவுநாள் நிகழ்வு கடந்த புதன்கிழமை புதுக்குடியிருப்பில் நடைபெற்றது

ஜேர்மன் தொழில்நுட்ப கூட்டு உழைப்பகமும், கல்வி அமைச்சும் இணைந்து நடத்திய பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழும் பிள்ளைகளுக்கான அடிப்படைக் கல்வி நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் நடத்தப்பட்ட பயிற்சிநெறி கடந்த புதன்கிழமை மாலை 2 மணிக்கு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் ஆசிரியர் இ.சிவராசா தலைமையில் இடம்பெற்றது.

மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமான இந்த நிகழ்வில் ஆசியுரையை முல்லைத்தீவு வலயப்பிரதிக் கல்விப் பணிப்பாளர் சிவராசா நிகழ்த்தினார்

சான்றிதழ்களை தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன், முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிப்பாளர் ப. அரியரத்தினம், ஜி.ரி.இசற்.முல்லைத்தீவு வலயப் பொறுப்பாளர் கென்றிலிஸ்மன், கே. நவநீலன் ஆகியோர் வழங்கினர்.

இந்த நிகழ்வின் சிறப்புரையை முல்லைத்தீவு கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் நிகழ்த்தினார். தமிழீழ கல்விக் கழக திட்டமிடல் பணிப்பாளர் இளவழுதி, முல்லைத்தீவு மாவட்ட கல்விக்கழக இணைப்பாளர் அ. இரத்தினசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஒரு பாடசாலையில் ஒரு ஆசிரியர் என்ற அடிப்படையில் இடம்பெற்ற இந்தப் பயிற்சி வகுப்பு கடந்த 18 ஆம் திகதி ஆரம்பமானது. இந்த நிகழ்வின் இறுதியில் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

(வெ)

# உழைக்கும் மகளிர் நிறுவனத்தால் பொழுதுபோக்கு மையங்கள்!

கிளிநொச்சி—

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன், வடமராட்சி கிழக்கிலுள்ள 17 இடைத்தங்கல் முகாம்களில் சிறுவர்களுக்கான பொழுதுபோக்கு மையங்கள் அமைக்கும் திட்டம் ஒன்றை 'உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனம்' கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்தது.

இதற்கான நிதிப்பங்களிப்பை ஐக்கியநாடுகளின் சிறுவர் பாதுகாப்பு நிதியம் வழங்கியது.

இளம் வயதிலேயே மிகப் பெரிய இழப்புகளையும் - சோகங்களையும் உணர்ந்து உளரீதியாகப் பாதிக்கப்பட்டு, இடைத்தங்கல் முகாம்களில் வாழ்ந்து வருகின்ற சிறார்களை உற்சாகமூட்டி - இழப்பிலிருந்து விடுபடச்செய்யும் நோக்கோடு சிறுவர் பொழுதுபோக்கு மையங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இவற்றோடு இணைந்து வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கத்தைக் கருத்திற்கொண்டு நூலகங்களும் அமைக்கப்படவுள்ளன.

இந்தப் பொழுதுபோக்கு மையங்களை நிர்வகிக்கும் பொறுப்பு இடைத்தங்கல் முகாமில் வாழும் தொண்டர் ஒருவரிடமே ஒப்படைக்கப்படும் எனவும் -

அவர்களுக்கான பொறுப்பை ஒப்படைத்து - அவர்களை நிதி அனுசரணையாளர்களுக்கு அறிமுகப்படுத்தும் நிகழ்வுத் திட்ட ஆரம்ப நாளாக நடைபெற்றதென உழைக்கும் மகளிர் அமைப்பினர் தெரிவித்தனர்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*தூங்காமை கல்வி துணிவுடமை இம்மூன்றும்*
*நீங்கா நிலனாள் பவற்கு.*

திருக்குறள்

# நமது நோக்கு

## ஒரு தீர்ப்பு உணர்த்தும் உண்மைகள்!

உலககெங்கும் அரச பயங்கரவாதத்தால் அடக்கி ஒடுக்கி அழிக்கப்பட்டு வரும் பல்வேறு தேசிய சிறுபான்மை இனங்கள் தம்மையும், தமது இருப்பையும், இருப்பிடத்தையும் பாதுகாத்து தக்கவைத்துக்கொள்ளவும், தங்களின் சுய நிர்ணய உரிமையை வென்றெடுக்கவும் நடத்திவரும் ஜீவ மரணப் போராட்டங்களின் தவிர்க்கவே முடியாத நியாயத் தன்மையை சர்வதேச சமூகம் வேறுவழியே இன்றி உணர்ந்து கொண்டு அந்த மக்கள்சார்பில் குரல் கொடுக்கவேண்டிய வரலாற்று அவசியம் ஏற்பட்டுவருகிறது என்றே கூறவேண்டும்.

பல்லின மக்கள் வாழும், பலவகை கலாசாரசூழல் நிலவும் நாடுகளில் மதம் மற்றும் மொழி ஆகியவற்றின் அடிப்படையில் பெரும்பான்மை சமூகத்தவரைப் பிரதிநிதித்துவம் செய்யும் அரசுகள் - சிறுபான்மைச் சமூகத்தவர்கள் மீது தமது மேலாதிக்கத்தைச் செலுத்தி அவர்களின் அரசியல் உரிமைகள் உட்பட அடிப்படை மனித உரிமைகள் அனைத்தையும் மிக நுட்பமான அரசியல் இராஜதந்திர நடவடிக்கைகள் மூலமும் அடிக்கடி மாற்றம் செய்யப்பட்டு வரும் அரசியல் யாப்பின் சரத்துக்கள் மற்றும் விசேட சரத்துக்களின் இணைப்பின் மூலமும் பறித்து அவர்களின் மனித அடையாளங்களையே சிதைக்கும் ஜனநாயகத்தின் பேரிலான சர்வாதிகார ஆட்சி முறையால் பறிக்கப்பட்டு வருவதை உலகெங்கும் பல்வேறு நாடுகளில் அவதானிக்கக்கூடியாதாக இருக்கிறது.

இலங்கையிலும் இதேபோன்ற நடவடிக்கைகளையே பெரும்பான்மை பௌத்த சிங்கள இனவாத ஆட்சித்தலைமைகள் கடந்த ஐந்து தசாப்த காலத்துக்கும் அதிகமாக-சிறுபான்மையினரான தமிழ்பேசும் மக்களுக்கு எதிராக மேற்கொண்டுவந்தபோதிலும், சர்வதேசம் இலங்கையின் இன முரண்பாட்டின் வேர்களை அதன் யதார்த்த நிலையிலிருந்து புரிந்துகொள்ளாமல், அரசின் பொய்ப்பிரசாரம் மற்றும் கருத்துவாக்கச் செயற்பாடுகளின் அடிப்படையில் அறிந்துகொள்ள முற்பட்ட அறியாமையின் காரணமாகவே தமிழ்மக்களின் சிங்களப் பேரினவாத அடக்குமுறைக்கு எதிரான தற்காப்பு மற்றும் உரிமைப்போரை பயங்கரவாதச் செயற்பாடுகளாக கற்பிதம் செய்துகொள்ள நேர்ந்தது எனலாம்.

குறிப்பாக அமெரிக்க - ஐரோப்பிய மேற்குலகத்தின் பயங்கரவாதம் குறித்த வரவிலக்கணம் என்பது ஜனநாயக சர்வாதிகாரம் என்ற முரண்நிலைத் தத்துவத்தின் அடிப்படையில் பல்வேறு அரசியல் மற்றும் இராணுவ சுயநல உள்நோககங்களுடன் உருவாக்கப்பட்டு இருப்பதாலேயே அடக்கப்படும் மக்களின் உரிமைக்குரல் அவர்களுக்குக் கேட்பதும் இல்லை. அந்த மக்களின் விடுதலைப் போராட்டத்தின் நியாயத் தன்மையை அவர்கள் புரிந்துகொண்டு தர்மம் காக்கத் துணிவதும் இல்லை.

இதனாலேயே, ஜனநாயகம் பேசும் ஆட்சியாளரின் அரச பயங்கரவாதச் செயல்களுக்கு அரசியல் அங்கீகாரத்தையும், ஆதரவுப் பின்பலத்தையும் அவர்கள் வழங்கிவந்த என்றால் மிகையில்லை.

ஆனால், அரசியல் மாற்றங்களும், வரலாற்றுத் திருப்பங்களும் வேறுசில சர்வதேச நிர்ப்பந்தங்களும் இதே நிலைப்பாட்டை அவர்கள் தொடர்ந்தும் இறுக்கமாகக் கடைப்பிடிக்க முடியாத நிலையை சர்வதேச வல்லாதிக்க சக்திகளுக்கே இன்று ஏற்படுத்தியுள்ளது என்பதும் நிஜமே ஆகும்.

இந்த மாறும் சர்வதேச அரசியல் சூழ்நிலையானது- நியாயங்களின் குரலையும், அடக்கமுறைக்கெதிரான விடுதலைப் பிரகடனங்களையும், போர்ப் பேரொலியின் அறைகூவலையும் எவராலும் புறக்கணிக்கவும், நிராகரிக்கவும் முடியாத நிலையொன்றை உருவாக்கத் தொடங்கியுள்ளது.

இதன் பின்னணியில் உலகமயமாதலின் அடிப்படையில் மாறும் உலக ஒழுங்கின் புறக்கணிக்கவே முடியாத புதிய வகையிலான அரசியல் உள்நோக்கங்களும் இருக்கவே செய்யும்.

ஆனாலும்கூட, உண்மைகள் அதனூடாக வெளிவருவதானது பல நியாயங்களை உலகுக்கு உணர்த்தவே செய்யும்.

அண்மையில் அமெரிக்க நீதிமன்றமொன்று அமெரிக்காவில் பயங்கரவாதப் பட்டியலில் சேர்க்கப்பட்டு, தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் உட்பட சில விடுதலை அமைப்புகளுக்கு - அவை தடை செய்யப்பட்டிருந்தாலும் கூட அவற்றின் அமைதிவழி நடவடிக்கைகளுக்கு சட்டபூர்வமாக ஆதரவளிக்க அமெரிக்காவிலுள்ள தனியார் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுக்கு உரிமையுண்டு எனத் தீர்ப்பளித்திருப்பது இந்த வகையில் முக்கியமான ஒன்றாகும்.

இந்தத் தீர்ப்பு சில முக்கிய விடயங்களைத் தெளிவுபடுத்தவே செய்கிறது.

அதாவது, தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்புக்கள் அங்கீகரிக்கப்பட வேண்டிய அமைதிவழி நடவடிக்கைகளில் நேர்மையாக ஈடுபடுகின்றன என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இதனால், அவற்றின் மீதான பயங்கரவாத முலாம் அகலத் தொடங்கியுள்ளது.


அடுத்ததாக இவற்றின் மீதான தடை என்பது மீள் பரிசீலனை செய்யப்படவேண்டியதாகியுள்ளது.

அத்துடன், இந்த அமைப்புக்களின் அமைதி வழி மனித உரிமைகள் தொடர்பான செயற்பாடுகளுடன் எவ ரும், எந்த அமைப்பும் இணைந்து செயற்பட இந்தத் தீர்ப்பு வழிவகுத்துள்ளது.

இந்தத் தீர்ப்பின் அடிப்படையில் மாறிவரும் உலக அபிப்பிராயங்கள் - இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக புதிய கருத்து நிலைப்பாட்டை எடுக்க வேண்டிய சிந்தனைக்கு - சர்வதேச அமைதி வழி மற்றும் சமாதான சக்திகளை, அவற்றை வலிறுத்தும் நாடுகளை இட்டுச் செல்லும் சாத்தியத்தை உருவாக்கியுள்ளது என்றே கூற வேண்டும்.

இது பேரினவாத ஆதிக்க அரசுக்கு எரிச்சலையும், குழப்பத்தையும் ஏற்படுத்தலாம். அரச பயங்கரவாதம் அம்பலமாக்கப்படுவதை எந்த ஆட்சியாளரால்தான் ஜீரணிக்க முடியுமாம்...?

# நாடும் நடப்பும்




## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# தடையற்ற மின்சாரமும், சாலை வசதியும் தமிழீழம் முன்னேற அவசியம் தேவை!

'எங்கள் கடல் வளம் அடிக்கடி கொள்ளை போகிறது. கிடைத்தற்கரிய சங்குகள், கடல் அட்டைகள் மற்றும் கடல்படுதிரவியங்களை எங்கள் கடற்பகுதிக்குள் அத்துமீறிப் பிரவேசிக்கும் இந்திய ட்ரோலர் படகுகள் அப்படியே கூட்டி வழித்துத்துடைத்துக் கொண்டு போய்விடுகின்றன' என்று வலைப்பாட்டில் புனித அன்னம்மாள் ஆலயத் திருநாள்கொண்டாட்டத்தில் கலந்து கொள்ள வந்திருந்த யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்த மீனவர் சங்க முன்னாள் பிரதிநிதி ஒருவரும் மன்னாரைச் சேர்ந்த சம்மாட்டி ஒருவரும் கவலையுடன் தெரிவித்தனர் என்றேன்.

உண்மை தானே எங்கள் தமிழீழத்தாயகத்துக்குப் பொருளீட்டித்தரக் கூடியது எங்கள் கடற்தொழில். இந்திய ட்ரோலர் படகுகள் அத்துமீறி அடிக்கடி பிரவேசித்து நமது கடல் திரவியங்களைக் கொள்ளையடித்துச் சென்று விடுகின்றனர். நமது கடல்வளத்தினால் நாம் பல புதிய தொழில்களைச் செய்வதற்கு வாய்ப்பிருக்கிறது. நமது கடலில் நல்ல தரமான உப்பு விளைகிறது. நாம் உப்பு ஏற்றுமதி செய்ய முடியும். இது மட்டுமல்ல உப்பிலிருந்து வேறுபல இரசாயனப் பொருள்களையும் உற்பத்தி செய்ய முடியும் முன்பு பரந்தனில் இரசாயனத் தொழிற்சாலை நல்ல முறையில் இயங்கி வந்தது. போரினால் இந்த இரசாயனத் தொழிற்சாலை இல்லாமல் அழிந்து போனது. ஆனாலும் கொழும்பில் இன்னும் கூட பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்தின் அலுவலகம் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. நமது தமிழீழ ஆட்சி மலரும் போது பரந்தனில் இரசாயனத் தொழிற்சாலை நல்ல முறையில் இயங்கமுடியும். என்று பரமசிவம் நம்பிக்கையுடன் சொன்னார்.

இதுமட்டுமல்ல கடற் பாசியிலிருந்து ஜெலி போன்ற ஒருவிதமான கலவை தயாரிக்கலாமென்றும் இது பெயின்ற் தயாரிப்பதற்குப் பயன்படுத் தலாமென்றும் சிலர் சொல்கிறார்களளென்றும் இந்தக் கலவை தமிழ் நாட்டில் கரையோரப் பகுதிக் கிராமமொன்றில் தயாரிக்கப்பட்டு வந்ததாகவும் கேள்விப்பட்டிருக்கிறேன் என்று சொன்னேன்.

எந்த நாடும் துரிதமாக முன்னேறுவதற்குச் சாலை வசதிகளும் தங்கு தடையற்ற மின்சார உற்பத்தியும், விநியோகமும் அவசியம் என்று பரமசிவம் சொன்னார்.

சாலை வசதிகள் ஜேர்மனி, பிரான்ஸ், லண்டன், சுவிட்சர்லாந்து முதலிய மேல் நாடுகளிலும், ஜப் பான், கொரியா, சீனா போன்ற நாடுகளிலும் சிறப்பாக இருக்கின்றன. இந்த நாடுகளில் மின்சார உற்பத் தியும் தங்கு தடையின்றி நடந்துகொண்டிருக்கின் றன. தடையில்லாத மின்விநியோகம் இந்த நாடுகளில் சீராக நடைபெறுகின்றது. இதனால் பெரிய பெரிய தொழிற்சாலைகள் இருபத்திநான்கு மணி நேரமும் இயங்கிக்கொண்டிருக்கின்றன. பொருட்களின் உற்பத்திகள் அதிகரிக்கின்றன. இந்தப் பொருட்களை உடனுக்குடன் ஏற்றுமதிசெய்து வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு சாலைவசதிகள் இருக்கின்றன. நமது தமிழீழத்திலும் மின்சார உற்பத்திக்கு நாம் வழிகாணவேண்டும். தமிழீழ தாயகத்தில் பரந்த வெளிகள் நிறைய இருக்கின்றன. இந்தப் பகுதிகளில் நாம் காற்றாலைகள் அமைக்க வேண்டும். தென் தமிழ் நாட்டின் கரையோரக் கிராமங்களான நாகர் கோயிலையடுத்த கன்னியாகுமரிக்குப் பக்கத்தில் ஆரல்வாய் பகுதியிலும் அதையடுத்த நாங்கு நேரிப்பகுதியிலும் நிறையக் காற்றாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

தமிழ் நாட்டில் இதன் கரைப்பகுதியில் கூடங்குளம் என்றொரு இடமிருக்கிறது. இது சிறிய கிராமம்தான். கன்னியாகுமரிக்குப்போகும் வழியில் இது இருக்கிறது. இங்கு அணுமின் நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. ரஷ்யாவில் அணுமின் நிலையம் வெடித்த பின் இங்கும் இந்தப் பீதி ஏற்பட்டிருக்கிறது. இந்த அணுமின் நிலையத்தினால் இலங்கைக்கும் ஆபத்து ஏற்படுமோ என்று சில காலத்தின் முன் அச்சம்தெரிவிக்கப்பட்டது. எப்படியும் மின்சாரம் தங்குதடையின்றிக் கிடைத்ததால் தான் ஒரு நாடு முன்னேற முடியும்.

காற்றாலைகள் மூலம் அதிக மின்சாரம் உற்பத்தி செய்யும் மாநிலமாகத் தமிழ் நாடு கருதப்படுகிறது. நமது தமிழீழத்தில் மாங்குளத்தில் ஒரு காற்றாலை அமைக்கப்பட்டது. இன்று அது அநாதையாகக் கிடக்கிறது. தொண்டமானாற்றில் முன்பொருகாற்றாலை அமைக்கப்பட்டது. இந்த ஆலையின் மூலம் நீர் இறைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது. தொண்டமானாறு நன்னீர் ஏரித் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டது. இந்தத் திட்டம் பற்றி இப்பொழுது யாருமே பேசுவதாய்க் காணோம். தமிழீழத்தில் காற்றாலைகள் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யலாம். வேறு வழிகளிலும் மின்னுற்பத்திக்கு வாய்ப்புத் தேடவேண்டும் என்று சொன்னேன்.

மேல் நாடுகளில் அணுசக்தியிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்தவர்கள் இப்பொழுது அணு சக்தியைப் பயன்படுத்துவதை விரும்பவில்லை. மக்கள் அணுசக்தியினால் கிடைக்கும் நன்மைகளைவிட தீமைகளே அதிகம் என்று கருதுகிறார்கள். எரிபொருள்களிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்வதும் சுலபமல்ல. இப்பொழுதே பெட்ரோல், டீசல் மற்றும் எரிபொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. இன்னும் சில வருடங்களில் எண்ணெய் உற்பத்தி நின்றுவிடலாமென்றும் சிலர் அச்சம் தெரிவிக்கின்றனர். நாம் குப்பைகளிலிருந்தும் மற்றும் பொருள்களிலிருந்தும் மின்னுற்பத்திக்கு வழிகாண வேண்டும் என்று பரமசிவம் சொல்லிக் கொண்டே நடந்தார்.

# வாசகர் நோக்கு

## இந்த இளைஞர்களின் முன்மாதிரி

எமது சமூகத்தில் பலதரப்பட்ட பண்பாட்டு சீரழிவுகள் தினமும் நடைபெறுவதைக் காண்கின்றோம். இந்த வகையில் மேலை நாட்டு நாகரிகங்களைப் போல் எமது மண்ணிலும் தலை விரித்தாடுகிற காட்சிகளும் உண்டு. எமது தமிழினம் தளைத்து நிற்க வேண்டுமானால் கலாசாரம் பண்பாடு கட்டுக்கோப்புடன் இருக்கவேண்டும்.

சில இளைஞர்கள் நிறைபோதையில் கண்மண் தெரியாமல் நடப்பதையும் சண்டித்தனம் விடுவதையும் நாம் தினமும் அறிகிறோம். சிலர் கொள்ளையடிப்பதிலும் ஈடுபடுகின்றார்கள்.

ஒரு சிலர் செய்யும் இந்த பாதக செயல்கள் எல்லோரையும் பாதிக்கும். எமது இனம் ஓர் இக்கட்டான நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறது. எனவே நாம் இனிமேலாவது நல்லவர்களாக ஒழுக்க சீலர்களாகவும் சமுதாயத்தில் சாதனை படைப்பவர்களாகவும் வாழக் கற்றுக் கொள்வோம்.

கொக்குவில் பொற்பதியில் அமைந்திருக்கும் பிரசித்தமான ஆலயமொன்றில் அந்த ஊர் மக்களாலும் பக்தர்களாலும் பேசப்பட்ட விடயம் அந்த ஊர் இளைஞர்கள் திருவிழா நாட்களில் செய்த அரும்பணி பற்றியதாகும். அவர்கள் ஆலய வேலைகள் அனைத்தையும் இரவு பகல் பாராமல் கண்ணும் கருத்துமாக மிகவும் அமைதியான முறையில் மிகச் சிறப்பாகச் செய்து முடித் துள்ளனர். யாரிடம் கதைத்தாலும் இந்த இளைஞர்கள் போன்று ஏனைய இளைஞர்களும் செய்தால் சமூகம் எவ்வளவு முன் னேற்றமடையும். நாமும் இவற்றை நேரில் கண்டோம் மெய் சிலிர்க்க வைக்கின்றது.

எல்லா இளைஞர்களும் இதுபோல் தத்தமது சமயத்தை பேணிப் பாதுகாக்க வேண்டும் அதன் போதனைகளைக் கேட்க வேண்டும். அதன்படி வாழ கற்றுக் கொள்ளவேண்டும். முன் கூறிய நற்பணிகளை ஆற்றும் சமயப்பற்றுள்ள, சமுதாயப்பற்றுள்ள இளைஞர்களின் பாதையில் நாமும் செல்வோம் என உறுதி பூணுவோம்.

ஊர் மக்கள் — கொக்குவில் கிழக்கு

சமூகவியல்... - இ.கிருஸ்ணகுமார்

# குழந்தையின் வளர்ச்சிப் பருவமும் அதன் ஒழுக்க நெறிகளும்


தமிழர் மரபில் கலை, கலாசாரம் போன்றவற்றுக்கு எவ்வளவு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றதோ, அதேயளவுக்கு ஒழுக்கத்துக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. குழந்தைகளின் வளர்ச்சிப் பருவங்களை ஐந்து பிரிவுகளாகப் பிரித்து, அவர்களின் கல்வி நிலை பற்றியும், ஒழுக்க நிலை பற்றியும் எடுத்துக் கூறிய முதன்மையான சிந்தனையாளரும், இயற்கைவாதியுமான ரூசோ - குழந்தைப் பருவம் பற்றிக் குறிப்பிடும் போது, புத்தம் புதிதாக மலர்ந்திருக்கும் குழந்தையுள்ளத்தை எந்த வகையாலும் மாசுபடுத்தக்கூடாது. உடல்வளர்ச்சிக்கும், புலன்களின் வளர்ச்சிக்கும் உறுதுணை புரிய வேண்டிய பருவம் குழந்தைப் பருவமாகுமென்று குறிப்பிட்டார். இதனை ரூசோ 5 -12 வயதுக்கு இடைப்பட்டவர்களை மாத்திரமே விசேடமாகக் குறிப்பிட்டுச் சொல்கிறார். இதனையே நவயுகக் கவிஞன் பாரதி -

ஓடி விளையாடு பாப்பா – நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா –ஒரு
குழந்தையை வையாதே பாப்பா.

என குழந்தைப் பருவ சிறார்களுக்கு பாடல் மூலம் நெறிப்படுத்துவது போன்று, சமுதாயத்தையே அகக்கண் கொண்டு நெறிப்படுத்தினான். அன்று 'பாரதி கண்ட கனவு' இன்று வரை தமிழ்ச் சமூதாயம் எங்கும் ஒங்கி ஒலித்துக் கொண்டு இருப்பதைக் காணலாம். இவ்வாறே குடும்ப நிலையில் கற்றுக் கொள்ளும் பழக்க வழக்கங்கள் தான் எதிர்காலச் சந்ததிகளை நெறிப்படுத்தும் திறவு கோலாக அமைந்து விடுகிறது. தாய் தந்தையர் பேசும் மொழியை சிறு வயதில் கற்றுக் கொண்ட குழந்தை - அந்த மொழியை அப்படியே பேசுவதை நாம் பார்த்திருக்கிறோம் அல்லவா? தந்தை செய்யும் தொழிலை குழந்தையும் வளர்ந்து, மரபு ரீதியான தொழில்களைச் செய்கிறது அல்லவா?

அப்படித்தான் ஒழுக்கமும். இதனையே அடிமேல் அடித்தால் அம்மியும் நகரும் எனவும், எறும்பூரக் கல்லும் குழியுமென அவ்வழியில் பல அனுபவங்களைப் பெற்ற எமது சான்றோர்கள் கூறிச் சென்ற முதுமொழிகளாகும். வீட்டிலே ஐந்து ஆண்டுகள் செல்வம் மிகு நிலையில் வாழ்ந்த குழந்தை முன்பள்ளி செல்லும் போது, வீட்டு நடைமுறைகள் யாவும் தான் செல்லும் இடமெல்லாம் கிடைக்க வேண்டுமென நினைக்கிறது. அவ்வாறு தான் எண்ணியது கிடைக்கப் பெறாத போது - அடம்பிடித்தல், பலத்த குரலெடுத்து அழுதல், கத்துதல் போன்ற செயற்பாடுகள் மூலம் முரண்பட்டுக் கொள்கிறது. அதேபோன்று வீடு வந்ததும் புத்தகத்தை ஓரிடத்திலும், சப்பாத்தை இன்னோர் இடத்திலும், உடைகளை வேறோரிடத்திலும் சுழற்றி எறிந்து விட்டு, கைகால் முகம் கூட கழுவாமல் உணவை உண்பதற்கு அடம்பிடிப்பதை நாம் எமது வீடுகளிலேயே காண்கிறோம். தாய் தனது குழந்தை மீது கொண்ட பாசமும், தந்தை கொண்ட பரிவும் குழந்தை ஆரம்ப படிநிலையில் செய்யும் தவறுகளை புலன்களில் போட்டுக் கொள்வதில்லை. இவ்வாறான நேரங்களில் குழந்தையை பெற்றோர் நல்வழிப்படுத்துதல் வேண்டும்.

கண்டிப்பும், கட்டாய பழக்கவழக்க செயற்பாடுகளும் குழந்தைப் பருவத்திலேயே வழங்குதல் வேண்டும். இல்லையேல் காலப்போக்கில் பெரிய தவறுகளை குழந்தைகள் செய்வதற்கும், பழிச் சொற்களை பெறுவதற்கும் பெற்றோரே காரணமாக அமைந்து விடுகின்றனர். குடும்பத்தில் தாய் அல்லது தந்தை ஆகிய இருவரில் ஒருவருக்காவது பிள்ளை கட்டுப்பட்டு நடப்பதற்கு, ஆரம்பகாலம் முதல் கடைப்பிடிப்பது கட்டாயமானது. இந்தநிலை குழந்தையை ஒரு பக்குவநிலைக்கு




இட்டுச் செல்லும். எனினும் எதற்கெடுத்தாலும் தடை விதிப்பது, போகும் இடங்களுக்கு போகவிடாமல் தடை செய்தல், போட்டிகள், சுற்றுலாக்கள், விழாக்கள் போன்றவற்றுக்கு போகவிடாமல் தடுத்தல், சம வயதுக் குழுவினரின் முன் குழந்தைகளைத் திட்டித் தீர்த்தல் போன்ற செயற்பாடுகளைப் பெற்றோர் ஓரளவு நிறுத்திக் கொள்ளுதல் வேண்டும். இல்லையேல் பெற்றோரை குழந்தைகள் வெறுப்புடன் நோக்குவதற்கும், பாசம் வைப்பதற்கும் இடமில்லாமல் போய்விடும்.

சம வயதுக் குழுவினர் என்பது பொதுவாக தவிர்க்கப்பட முடியாத ஒன்றாகும். எனவே அதற்கு ஓரளவு இடம் கொடுக்கத்தான் வேண்டும். எனினும் கண்டிப்புடன் இடம் கொடுக்கலாம். இந்த வயது பிரிவுகளைத் தாண்டி வந்தவர்கள் தான் பெற்றோர்கள். எனவே தாம் செய்த தவறுகளைத் தமது குழந்தைகளும் செய்து விடுவார்கள் என குழந்தைகளைத் தடை செய்வது, தம்மைப் பற்றிய ஆளுமையை சமுதாயத்துக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுவதாக அமைந்து விடும். எனவே பாடசாலைப் பருவத்திலேயே தலைமை தாங்கும் பண்பை வளர்க்கவும். சிந்திக்கவும், கிரகிக்கும் ஆற்றலை வளர்க்கவும், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை பெற்றுக் கொள்ளவும் குழந்தைகளுக்கு வேண்டிய கால அவகாசத்தை பெற்றோர்கள் வழங்குதல் வேண்டும். பள்ளிப் பருவ செயற்பாடுகள் மூலம் ஒரு குழந்தை பதிக்கும் தடங்கள் எதிர்கால உலகில் அந்தக் குழந்தையை அதி உன்னத நிலைக்கு இட்டுச் செல்லும். குழந்தைப் பருவத்தில் காட்டும் அன்பு - நிறை பருவத்தில் சற்று மாற்றமடையுமாறு தம்மை ஆளும் திறனைப் பெற்றோர்வகுத்துக் கொள்ளுதல் வேண்டும். கல்விநிலையை எடுத்து நோக்கும் போது, பெற்றோர் தமது விருப்பத்தை மாத்திரம் முதன்மையாகக் கொள்ளாமல், குழந்தைகளின் விருப்பங்களையும் கேட்டு அறிந்து, அதற்கேற்ப சரியானதொரு முடிவை எடுத்தல் வேண்டும். வாரத்தின் ஒரு நாளாவது மனைவி - குழந்தைகளுடன் ஒன்றாக இருந்து உணவை பரிமாறிக் கொள்ளுங்கள். உத்தியோகம் செய்யும் பெற்றோர் தமக்கு நேரம் என்ற கருத்தை எதிர்மாறாகக் கூறலாம். அதைவிட குழந்தைகளின் எதிர்காலமும், பாசமும், ஒழுக்கமும் மிக முக்கியமானது. குழந்தை பாடசாலை முடிந்து வீடு வந்ததும், பிற்பகல் வேளைகளில் ஒரு மணித்தியாலத்தையாவது குழந்தைகளுடன் செலவு செய்யுங்கள். இதன் மூலம் பெற்றோர் தம்மில் எவ்வளவு அக்கறையுடன் இருக்கின்றனர் எனும் புரிந்துணர்வு குழந்தைகளுக்கு ஏற்பட வழிவகுக்கும்.

வீட்டில் உரையாடும் போது குழந்தைகள் முரண்படாத வகையில் உங்களது சம்பாசனைகளை வைத்துக்கொள்ளுங்கள். இது ஒழுக்கத்தின் ஒரு படியாக அமையும். சில வீடுகளில் குடி போதைகளில் பேசுதல், சண்டைசெய்தல், பாத்திரங்களைப் போட்டு உடைத்தல் போன்ற செயல்கள் குழந்தைப் பருவத்தினரின் மனதில் பெரிய மாற்றங்களை கொண்டு வரும். இதன் மூலம் தாமும் வளர்ந்து, தகாத செயல்களில் ஈடுபடுதல், பெரியோரை மதிக்காமல் நடத்தல், வீதிகளில் செல்லும் போது வாயில் வந்தவாறு பேசிச் செல்லுதல், தாம் செய்வது மட்டுமே சரியென நினைக்கும் மனப்பாங்கு என்பன இன்றைய காலகட்டத்தில் சர்வ சாதாரண விடையங்களாகிவிட்டன. எனவே எண்ணும் செயல்களை உயர்வாக எண்ணுதல் வேண்டும். இந்தச் செயல் நாட்டுக்கும், வீட்டுக்கும் நலன் பயப்பதாக அமையும்.

அபிவிருத்தி ஒரு பார்வை... - இரா.வின்

# நவோதயா எனும் தொனிப்பொருளில் முடங்கிக் கிடக்கும் அபிவிருத்திகள்!



ஆட்சியாளர்கள் தம் ஆட்சிக் காலத்தில் பதவியைத் தக்கவைப்பதற்கும், தாம் சார்ந்த கட்சியை நிலைநிறுத்தி, மக்கள் மத்தியில் இடம்பிடிக்கும் நோக்கில், பல வகையான மாற்றங்களை சகல துறைகளிலும் ஏற்படுத்தி வருகின்றனர். இலவசக் கல்விக் கொள்கையை அரசாங்கம் நடைமுறைப்படுத்துகின்ற போதிலும், காலத்துக்குக் காலம் கல்வித்திட்டங்களில் மாற்றங்களையும், புதிய அபிவிருத்தித் திட்டங்களையும் அண்மைக்காலத்தில் அறிமுகப்படுத்தி வருகிறது.

பாடசாலைகளை துரித அபிவிருத்தி செய்யும் நோக்கில் "நவோதயா அபிவிருத்தித் திட்டத்தை" 1998 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டபோதும், கடந்த வருடத்தில் இருந்தே நடைமுறைப் படுத்தி வருகிறது. "நவோதயாப் பாடசாலைகள் மூலம் நாடு பொலிவு காணல்" எனும் தொனிப்பொருளில் முடுக்கிவிடப்பட்ட துரித அபிவிருத்தியாகவே இதனைக் கருதமுடியும்.

நவோதயா துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் 342 பாடசாலைகள் அபிவிருத்திக்காகத் தெரிவு செய்யப்பட்டன. இதில் 124 பாடசாலைகளை முன்னுரிமை அடிப்படையில் அபிவிருத்திசெய்யவுள்ளனர். 124 பாடசாலைகளிலும், 24 பாடசாலைகள் உடனடி துரித அபிவிருத்திக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இந்தப் பாடசாலைகளில் ஒன்றே மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலக் கல்லூரி. (நவோதயா) (முன்பு மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை)

பல லட்சம் ரூபா பெறுமதியான அபிவிருத்தித் திட்டத்தில் தேசியப் பாடசாலைக்கு நிகரான வசதி வாய்ப்புகள் ஏற்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சென்ற வருடத்தில் பல முன்மொழிவுகள் இடம்பெற்றன. சிறு வேலைத் திட்டங்களும் நடைபெற்றன.

இந்த வருடம் 5 லட்சம் ரூபா பெறுமதியான நூல் கொள்வனவுக்கென ஒதுக்கியுள்ளதாகவும், நூல்களின் விபரங்களைக் கோரியுள்ளதாகவும் அறியமுடிகிறது. முதற் கட்டமாக 80 லட்சம் ரூபா பெறுமதியான இருமாடிக் கணினி வள நிலையமும், 30 லட்சம் ரூபா பெறுமதியான நூல் நிலையக் கட்டடமும், க.பொ.த.உயர்தர விஞ்ஞானப்பிரிவு மாணவர்களுக்கான விஞ்ஞான ஆய்வுகூடத் தொகுதியும் ஆரம்ப வேலைகளாகத் தெரிவுசெய்யப் பட்டுள்ளன.

கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் நவோதயா வாரம் பாடவிதான, இணைப் பாடவிதான சிரமதானப் பணிகள், கலைநிகழ்வுகள் என மேற்கொள்ளப் பட்டன. மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலக் கல்லூரியில் (நவோதயா) ஜூலை மாதம் 11 - 15 ஆம் திகதிவரை ஐந்து தினங்கள் நவோதயா வாரம் நினைவு கூரப்பட்டது. இதில் கல்விசார், கல்வி சாரா கலைநிகழ்வுகள் இடம்பெற்றதுடன், பரிசளிப்பும் இடம்பெற்றது.

பாடசாலை அமைப்பு மற்றும் பௌதீக வளங்களை விருத்திசெய்யும் நோக்கில் பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் எனப் பல்வேறுபட்ட தரப்பினருடன் பாடசாலைச் சமூகமும் இணைந்தே இந்த ஐந்துநாள் செயற்பாடுகளை மேற்கொண்டன. துறைசார்ந்த கல்வியாளர்கள் கலந்துகொண்டு நிகழ்வைச் சிறப்பித்தமைக்கு அப்பால், ஆசிரியர்களின் வழிகாட்டலில் - மாணவர்களின் கலைநிகழ்வுகள் பங்குகொண்ட அனைவரையும் மகிழ்வித்தமை குறிப்பிடத்தக்கது.

முதல்நாள் நிகழ்வு சமய ஒழுக்க விழுமிய தினம். இதில் மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வும், பாடசாலைக்கெனக் கொள்வனவு செய்யப்பட்ட புதிய காணியை சிரமதானப் பணிமூலமாக புனரமைக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

இரண்டாம் நாள் நிகழ்வில் தமிழ் மொழித்திறன் விழா - முத்தமிழ் மன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது. விழாவில் கலந்துகொண்ட யாழ்.வலய கல்விப் பணிப்பாளரும், வடக்கு - கிழக்கு மாகாண நவோதயா பாடசாலை இணைப்பாளருமான வே.தி.செல்வரட்ணம் குறிப்பிடுகையில் -

பாடசாலையின் வளர்ச்சிக்கும், மாணவர்களின் முன்னேற்றத்துக்கும், வாழ்க்கைக்கும் தமிழ் அவசியம் என்பதையும், இதனைப் பாடசாலைகள் வழுவின்றிக் கற்பிக்கவேண்டுமெனவும் வலியுறுத்தியதுடன், நவோதயாவாரத்தைக் கொண்டாடும் பாடசாலைகளில் இந்தப் பாடசாலை முதன்மையானதெனவும் குறிப்பிட்டார். நடனம், நாடகம், கூத்து இவற்றுடன் பல கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

பாடசாலைகள் தேசத்தின் முன்னேற்றத்துக்கும், முழுமையான சமூக அமைப்புக்கும் பெரிதும் பங்காற்றக்கூடிய மாணவர் சமூகத்தை உருவாக்குகின்ற சக்திமிக்க ஒரு மத்திய நிலையம்.

எங்கு, எவை, எப்படி நடந்தாலும் திட்டமிடலும், ஒழுங்கமைத்தலும், நெறிப்படுத்தலும், முகாமைச் செயற்பாடுகளும் பூரணமாக இடம் பெறுகின்ற போதே, நாம் மேற்கொள்கின்றவை வெற்றியளிக்கின்றன. இவற்றைக் கல்வியாளர்களாலேயே மிகக் கச்சிதமாக மேற்கொள்ளமுடியும். இதற்குத் தேவையானவர்களைக் கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு பாடசாலைச் சமூகத்தையேசாரும்.

மிக விரைவில் தேசிய பாடசாலைக்கு நிகராக, மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலக் கல்லூரி மிளிரும். ஆனால் தனியே கட்டடங்களும், தளபாடங்களும், உபகரணங்களும் இருந்து பயனில்லை. இவற்றை உரிய முறையில் பயன்படுத்தி, நமக்குக் கிடைத்துள்ள அரிய வாய்ப்பை ஒவ்வொரு மாணவர்களும் முழுமையாக தவறவிடாமல் பெற்றுக்கொள்வார்களாயின், தேசியத்தைக் கட்டியெழுப்பக்கூடிய கல்வியாளர்களாக மாறமுடியும்.

இதற்கு ஆசிரியர்களின் ஒத்துழைப்புகளுக்கு அப்பால் அவர்களது வழிகாட்டலில் ஒவ்வொரு மாணவர்களும் - தேடலுடன் கூடிய கற்றல் முயற்சியை மேற்கொள்வதுடன், தம் வளர்ச்சியிலும், தாம் சார்ந்தவர்களின் அபிவிருத்தியிலும் பங்களிப்பு வழங்கவேண்டும். நவீன வசதி வாய்ப்புகளுடன் மிளிரும் பாடசாலையில் - சகல மாணவர்களும் பல்துறை சார்ந்தவர்களாக வெளிவரவேண்டும். மாணவர்களின் நலன் கருதியே கல்விக் கூடங்களும், அவை சார்பான அபிவிருத்தித் திட்டங்களும் மேற்கொள்ளப் படுகின்றன. மாணவர்களின் செயற்பாடுகளில் முன்னேற்றம் ஏற்படவேண்டும். ஆனால் இவை காலத்தின் முடிவாகவேயுள்ளது.

### முத்தரப்பு ஒருநாள் தொடர்

# இந்தியா 6 விக்கெட்டுக்களால் மேற்கிந்திய அணியை வென்றது!



தம்புள்ள —

இந்திய ஒயில் கிண்ணத்துக்கான முத்தரப்பு கிரிக்கெட் தொடரில், நேற்று தம்புள்ள மைதானத்தில் இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் இந்திய அணி 6 விக்கெட்டுக்களால் மேற்கிந்தியத்தீவுகள் அணியைத் தோற்கடித்தது.

நேற்று பகல் - இரவு ஆட்டமாக இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

எனினும் மழை குறுக்கிட்டதால் ஆட்டத்தின் ஆரம்பத்தில் சிறிது தாமதம் ஏற்பட்டது. எனினும் பின்னர் மேற்கிந்தியத்தீவுகள் அணி ஆட்டத்தை ஆரம்பித்தது:

இந்த அணி ஒரு ஓட்டத்தைப் பெற்றிருக்கையிலேயே முதலாவது விக்கெட் வீழ்த்தப்பட்டது. மோட்டன் ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார். இதன்பின்னர் ஜோசப் 3 ஓட்டங்களுடனும், மார்ஷல் 26, சந்தர்போல் 22, பவல் 1, சிமித் 20, டியோநரைன் 41, ராம்டீன் 24, பவல் 0, பெஸ்ற் 24 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

இறுதியில் அவ்வணி 47.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 178 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதில் 13 ஓட்டங்கள் உதிரிகளாகப் பெறப்பட்டவையாகும்.

பந்துவீச்சில் ஹர்பஜன், நெஹ்ரா, ஷேவாக் மூவரும் தலா இரண்டு விக்கெட்டுக்களையும், பதான், சகீர்கான் மற்



றும் றைனா மூவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதன்பின்னர் 179 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற



இலக்குடன் களமிறங்கிய இந்திய அணியின் துடுப்பாட்ட வரிசையில் மாற்றமிருந்தது.

தொடக்க ஆட்டக்காரர்களாக ஷேவாக் மற்றும் கைவ் இருவரும் களமிறங்கினர். எனினும் ஷேவாக் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.


இதன் பின்னர் கைவ் 24, றைனா 34, யுவராஜ் 28 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். இறுதிவரை ராவிட் 52, டோனி 15 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காமல் இரு ந்து இந்திய அணிக்கு வெற்றியைத் தேடித் தந்தனர்.

இறுதியில் இந்திய அணி 36 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 180 ஓட்டங்களைப்



பெற்று 6 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. உதிரிகளாக 24 ஓட்டங்கள் பெறப்பட்டன.

பந்துவீச்சில் லோகன் 2, சிமித் மற்றும் பெஸ்ற் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.



மொன்ட்ரியலில் உலக நீர் விளையாட்டுப் போட்டிகள் நடந்து வருகின்றன. இதில் பெண்களுக்கான 200 மீற்றர் பட்டர்பிளை நீச்சல் பிரிவில் போலந்து வீராங்கனை ஓடிலியா ஜெட்ரிஜெக் தங்கம் வென்றார். இவர் போட்டிதூரத்தை 2 நிமிடம் 5.61 வினாடிகளில் கடந்து உலக சாதனை படைத்தார்.

### கே.சி.சி.சி கிண்ண கிரிக்கெட்

## பல்கலைக்கழக அணியை தோற்கடித்து பற்றீசியன் அணி இறுதிப்போட்டிக்கு!

யாழ்ப்பாணம் —

கே.சி.சி.சி கிண்ணத்துக்கான கிரிக்கெட் போட்டித் தொடரில் நேற்றைய அரையிறுதி ஆட்டத்தில் பல்கலைக்கழக அணியை 5 விக்கெட்டுக்களால் தோற்கடித்த பற்றீசியன் அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.பல்கலைக்கழக அணி 27.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 150 ஓட்டங்களைப் பெற்றது.

இந்த அணி சார்பில் சர்வானந் 84 ஓட்டங்களைக் குவித்தார். கௌரிபாலன் 18, ரஜீவன் 8 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் ரஜினஸ் 3, ரஞ்சித் 2, விநோதன் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். பற்றீசியன் அணியால் உதிரிகளாக 25 ஓட்டங்கள் விட்டுக்கொடுக்கப்பட்டன.


பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன் அணி 25.3 ஓவர்களிலேயே 5 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 151 ஓட்டங்களைப் பெற்று 5 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியது.

பற்றீசியன் வீரர் பார்த்தீபனின் அரைச்சதம் பார்வையாளர்களைப் பரவசப்படுத்தியது. இவர் 16 பந்துகளில் 53 ஓட்டங்களைக் குவித்தார். ஜனன்ராஜ் 35 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

சேச்சில் 20 ஓட்டங்களுடனும், முகுந்தன் 35 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் அருண்ராஜ் 2 விக்கெட்டுக்களையும், ஜனாதரன் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். (58)

## உலக நீச்சல் போட்டியில் அமெரிக்க வீரர் உலகசாதனை





மொன்ட்ரியல் —

உலக நீச்சல் சாம்பியன்ஷிப் தொடரில் அரோன் பியர்சோல் லீசெல் ஜோன்ஸ் புதிய உலக சாதனை படைத்தனர்.

முன்னணி வீர வீராங்கனைகள் பங்கேற்கும் உலக நீச்சல் சம்பியன்ஷிப் தொடர் மொன்ட்ரியலில் நடைபெற்றுவருகிறது.

ஆண்களுக்கான 200 மீற்றர் பேக்ஸ்ட்ரோக் பிரிவுப் போட்டிகள் வெள்ளிக்கிழமை நடைபெற்றன. இதில் பங்கேற்ற அமெரிக்காவின் பியர்சோல் அதிவிரைவாக நீந்தி, போட்டித் தூரத்தை 1 நிமிடம் 54.66 வினாடிகளில் கடந்தார். இதன் மூலம் தங்கம் வென்ற இவர் புதிய உலகசாதனையையும் படைத்தார்.

அவுஸ்ரேலியா வின் மார்க்ஸ் ரோகன் (1 நிமிடம் 56.53 வினாடி) வெள்ளியும், அமெரிக்காவின் ரியான் லோச்டி (1:57:00) வெண்கலமும் வென்றனர்.

200 மீற்றர் பிரீஸ்டைல் குழு பிரிவில் அமெரிக்காவின் மைக்கல் பெல்ப்ஸ், ரியான் லோச்டி, பீட்டர் வான்டர்கி, கெல்டி கில்லர் அணி தங்கம் வென்றது. இவர்கள் போட்டித் தூரத்தை 7 நிமிடம் 6.58 வினாடிகளில் கடந்தனர்.

பெண்களுக்கான 200 மீற்றர் பிரஸ்ட் ஸ்ட்ரோக் பிரிவில் அவுஸ்ரேலியாவின் ஜோன்ஸ் 2 நிமிடம் 21.71 வினாடிகளில் கடந்து புதிய உலகசாதனை படைத்தார்.

ஜெர்மனியின் அன்னி போல்ஸ்கா (2 நிமிடம் 25.84 வினாடி) வெள்ளியும், ஒஸ்ரியாவின் மிர்னா ஜுகிக் (2 நிமிடம் 27.11 வினாடி) வெண்கலமும் கைப்பற்றினர்.

### பிரான்ஸ் வீராங்கனைக்கு தங்கம்!

ஒஸ்லோ —

நோர்வேயில் உள்ள ஒஸ்லோ நகரில் கோல்டன் லீக் தடகள சம்பியன்ஷிப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில் பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் பிரிவில், பிரான்சின் அரோன் 11.06 வினாடிகளில் போட்டித் தூரத்தைக் கடந்து தங்கம் கைப்பற்றினார்.

அமெரிக்க வீராங்கனைகள் லொரின் வில்லியம்ஸ் 11.16 வினாடிகளில் கடந்து வெள்ளியும், லடாசா கோலன்ட் 11.17 வினாடிகளில் கடந்து வெண்கலமும் கைப்பற்றினர்.

முப்பாய்ச்சல் பிரிவில் ரஷ்யாவின் தாதியானா லிபிடிவா 14.89 மீற்றர் தூரம் தாண்டி தங்கம் வென்றார்.

# விளையாட்டு

## ராவிட் செய்த தவறினால்தான் இந்திய அணி தோல்வியுற்றது!

### அர்ஜுன ரணதுங்க கருத்து



தம்புள்ள —

இலங்கைக்கு எதிராக நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் இந்திய அணி வெற்றிபெறும் நிலையில் இருந்தபோதும், கப்டன் ராவிட் பந்துவீச்சாளர்களைப் பயன்படுத்திய விதத்தில் இந்திய அணிக்கு தோல்வி ஏற்பட்டது.

வேகப்பந்து வீச்சாளர் பதான், ஹர்பஜன்சிங் ஆகியோரை முதலிலேயே தொடர்ந்து பந்து வீச வைத்து அவர்களது ஓவரை ராவிட் முடித்துவிட்டார். இதனால் 5 ஆவது பந்துவீச்சாளராக யாரை செயல்படுத்துவது என்பதில் ராவிட் குழம்பிவிட்டார். இதுதான் தோல்விக்கு காரணம்.

இந்த நிலையில் இலங்கை முன்னாள் கப்டன் ரணதுங்க ராவிட் செய்த தவறே இந்தியா தோல்வி அடைந்ததற்கு காரணம் எனக் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது -

ராவிட் முதன்முறையாக தொடர் முழுவதும் கப்டனாக பொறுப்பேற்றுள்ளார். அவர் மூன்று இடது கை வேகப்பந்து வீச்சாளர்களை பயன்படுத்தியுள்ளார். இது தவறானது. துடுப்பாட்ட வீரனுக்கு இவர்கள் வீசும் பந்து பல கோணங்களில் அமையாது. மேலும் அனுபவம் வாய்ந்த சுழற்பந்து வீச்சாளர் கும்ளே ஆட்டத்தில் சேர்க்கப்படவில்லை.

அவர் தனது சிறப்பான பந்து வீச்சால் துடுப்பாட்டக்காரர்களுக்கு நெருக்கடி கொடுக்கக் கூடியவர். மேலும் 5 ஆவது பந்து வீச்சாளரை ராவிட் சரியாக பயன்படுத்தவில்லை. துடுப்பாட்டத்திலும் யுவராஜ்சிங்கை 3 ஆவது வீரராக இறக்கியது தவறு.

என்னைப் பொறுத்தவரையில் யுவராஜ் சிங்கை 5 ஆவது அல்லது 6 ஆவது வீரராக களம் இறக்குவது தான் சரியானது. ஷேவாக் ஆட்டமிழந்ததுமே கைவ்வை களம் இறக்கியிருக்கலாம்.

இந்திய அணியின் இரண்டு சிறந்த முன்னணி வீரர்கள் ஆடவில்லை. ஷேவாக் ஒன்றும் சிறந்த ஆட்டக்காரர் இல்லை. அவரால் ஜெயசூர்யா போல் அணிக்காக தொடர்ந்து விளையாட முடியாது. காயம் ஏற்பட்ட போதிலும் ஜெயசூர்யா சிறப்பாக ஆடினார்.

புதுமுக வீரரான ரெய்னா வந்த முதல் பந்திலேயே ஆட்டமிழந்தார். அது அவருக்கு பெரிய ஏமாற்றத்தை அளித்திருக்கும். வேணுகோபால் ராவ் மிகச்சிறப்பாக ஆடினார். அவர் முரளிதரன் பந்துகளை நல்ல முறையில் எதிர்கொண்டு விளையாடினார்.

இலங்கை பந்து வீச்சாளர்களான மஃரூப், லொக்கு ஹெற்றிகே மிகச்சிறப்பாக பந்து வீசினர். அவர்கள் வாஸ், சொய்சா இல்லாத குறையைப் போக்கினர்.

மொத்தத்தில் ராவிட் செய்த தவறுகளே இந்த ஆட்டத்தில் இந்தியா தோல்வியடையக் காரணம். இவ்வாறு அவர் கூறினார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
*The Leading Daily of Tamils' Homeland*

# ரயில்வே கட்டணங்கள் 50வீதத்தால் அதிகரிப்பு!

கொழும்பு—

இன்றிலிருந்து அமுலாகும் வரையில், ரயில் கட்டணங்கள் ஐம்பது வீதத்தால் அதிகரிக்கப்படவுள்ளதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது. இந்தக் கட்டணங்கள் நான்கு வகையாக அதிகரிக்கப்படவுள்ளன.

இந்த அதிகரிப்புகள் இன்றிலிருந்து அமுலுக்கு வந்தாலும், பருவ கால சீட்டுக்களில் எந்த மாற்றமும் இருக்காதெனவும் தெரிவிக்கப்படுகிறது. இந்தக் கட்டண அதிகரிப்புத் தொடர்பான அறிக்கை எதிர்வரும் 7 ஆம் திகதி அனுப்பப்படுமெனவும் ரயில்வே திணைக்களத் தகவல்கள் தெரிவித்தன.

# சுதந்திரக்கட்சியின் பிரசாரம் அடுத்த மாதம் ஆரம்பம்!

கொழும்பு—

சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஜனாதிபதித் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை எதிர்வரும் செப்டம்பர் மாதம் 6 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கவுள்ளது. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது சீன விஜயத்தை முடித்துக்கொண்ட பின்னரே இந்த நடவடிக் கைகள் ஆரம்பமாகவுள்ளன.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராகவும் அமைச்சர் அனுரா பண்டார நாயக்கவை பிரதமர் வேட்பாளராகவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்தியக் குழு கடந்த வியாழக்கிழமை நியமித்தது குறிப்பிடத்தக்கது.

# நாடாளுமன்ற உறுப்பினரின் வாகனம் மோதி பெண் மரணம்!

புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ராங்காபண்டார பயணம் செய்துகொண்டிருந்த வாகனம் மோதி பெண்ணொருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

நேற்றுக்காலை இரணவில பிரதேசத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மாரவில பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணொருவரே உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இரணவில பிரதேசத்தலிருந்து குமாமடுகல என்ற இடத்தை நோக்கி வேகமாகச் சென்ற நாடாளுமன்ற ஊறுப்பினரின் வாகனமே மோதியதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தினை அடுத்து அங்கு கூடிய பிரதேச வாசிகள் வாகனத்தை தாக்க முற்பட்ட வேளை பொலிஸார் அதனைத் தடுத்ததாக தெரியவருகிறது.

## பலாலி விமான...

ஏற்படும் அதிர்வுகளை அடுத்தே இந்தப் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

புனரமைப்புப் பணிகளுக்காக விமானங்கள் தரையிறங்குவது தடைப்படும் சூழலில் - வடபகுதிக்கான படையினரின் போக்குவரத்துக்காக எம்.ஐ.26 ரக ஹெலிகொப்டர்கள் இரண்டு இந்தியாவிடமிருந்து வாடகைக்குப் பெறப்படவுள்ளன.

தற்போது அன்ரனோவ் விமானங்கள் மூலம் நாளொன்றுக்கு 750 படையினர் பலாலியிலிருந்து இரத்மலானைக்கும், அதேயளவு படையினர் இரத்மலானையில் இருந்து பலாலிக்கும் பயணத்தை மேற்கொள்கின்றனர்.

இதற்காக தினமும் 8 முதல் 10 முறை அன்ரனோவ் விமானங்கள் பயணத்தை மேற்கொள்கின்றன.

விமான ஓடுபாதை புனரமைப்புப் பணிகளால் நாளொன்றுக்கு 1500 படையினரின் பயணம் தடைப்படும் என்பதால் - எம்.ஐ.26 ரக ஹெலிகள் இரண்டு இந்தியாவிடமிருந்து பெறப்படவுள்ளன.

எம்.ஐ.ஹெலி ஒன்றின் மூலம் ஒரே தடவையில் - 95 படையினரை ஏற்றியிறக்க முடியும். அல்லது 18 -20 தொன் எடையுள்ள பொருட்களை இவற்றில் ஏற்றிச்செல்ல முடியும்.

ஹெலிகள் மூலம் அனுப்பப்படும் படையினருக்கு மேலதிகமாக கடல் வழியாகவும் அனுப்பப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

ஓடுபாதை புனரமைப்புப் பணிகளை துரிதமாக மேற்கொள்வதற்காக - விமானங்கள் தரையிறங்குவது நிறுத்தப்பட்டாலும் தொடர்ச்சியாக நாள் முழுவதும் திருத்தப்பணிகள் மேற்கொள்ளப்பட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

## பஸ்கள்...

வீ.இராசலட்சுமி, கே.வயிரக்கா, எஸ்.சிங்கராசா, எஸ்.நிசாந்தி, எஸ்.செபமாலை, ஐ.யேசுராஜ், கபில குலசேகர, பி.விசாகபிள்ளை, வி.கலையம்மா, எஸ்.செல்லம்மா, எஸ்.சோபனா, பி.சுறோமா, பி.கோவிந்தம்மா, எஸ்.பூபதி, எஸ்.இராஜேஸ்வரி, எஸ்.காளிமுத்து ஆகியோரே வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அத்துடன் பஸ் சாரதியும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## விடுதலைப் புலிகளின்...

திருகோணமலைக்கும் - மாதத்துக்கு ஒரு தடவை மாத்திரமே பயணங்களை மேற்கொள்ளப் பாதுகாப்பு வழங்க முடியும் என சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால விதித்த நிபந்தனையை விடுதலைப் புலிகள் நிராகரித்திருந்தனர்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு வரும் விடுதலைப் புலிகளுக்குப் பாதுகாப்பு வழங்குவதானது நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் ஒரு நடவடிக்கையாக மேற்கொள்ளப்படுகிறதே தவிர, போர் நிறுத்த உடன்படிக்கையின் கீழ் இது கட்டாயமல்ல என்றும் ஜயந்த தனபால தெரிவித்திருந்தார்.

எனினும், இம்முறை எழிலனுக்குப் பாதுகாப்பு வழங்குமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளை படைத்தரப்பு ஏற்றுக்கொண்டுள்ளது என்பதை, எழிலனுக்கு கிடைத்த முக்கிய பிரமுகருக்கான பாதுகாப்பின் மூலம் உணரக்கூடிய தாகவுள்ளது.

திருமலை 22 ஆவது படைப் பிரிவிற்கு இந்த உத்தரவுகளைக் கடைப்பிடிக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. திருமலையின் 221 ஆவது படையணிக்கும் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

கப்டன் அல்லது லெப்டினன் தரத்திலான இரு அதிகாரிகளும், ஏனைய தரத்திலான 34 படையினரும், ஒரு இராணுவப் பொலிஸ் அதிகாரியும், ஒரு தகவல் பிரிவு அதிகாரியும் எழிலனுக்கான வழித்துணைப் பிரிவில் இருந்தனர். அத்துடன் எழிலன் பயணித்த வாகனத்தின் உள்ளேயும் இரு படை வீரர்கள் பயணித்தனர் என்றும் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வவுனியா விபத்தில் இளைஞன் பலி!

வவுனியா—

வவுனியா - கோவில்குளம் பகுதியில் மின்கம்பத்துடன் மோட்டார் சைக்கிள் ஒன்று மோதியதில் மோட்டார் சைக்கிளை ஓட்டிச்சென்ற இளைஞர் அந்த இடத்திலேயே மரணமடைந்தார்.

நேற்று முன்தினம் இரவு மேற்படி இளைஞன் வவுனியாவிலிருந்து தனது வீடு அமைந்துள்ள நேசபுரத்தை நோக்கி சென்றபோது, கோவில் குளம் பகுதியில் விபத்தில் சிக்கினார். இறந்தவர் எஸ்.புவனேந்திரன் என அடையாளம் காணப்பட்டார்.

# மரணதண்டனை முறை நடைமுறைக்கு வராது!

கொழும்பு—

இலங்கையில் மரணதண்டனை நிறைவேற்றப்படுவதற்கான விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டபோதும் அது நடைமுறைப்படுத்தப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமையன்று பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற படையினருடனான சந்திப்பின் பின்னர் ஜனாதிபதியிடம் இது தொடர்பாக பொலிஸ் அதிகாரி ஒருவரால் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி சந்திரிகா, ஒருவரின் மரணத்துக்காக தாம் கையொப்பமிடப்போவதில்லை எனக் குறிப்பிட்டார்.

இந்த நிலையில் தமது பொறுப்பை பிரதிப் பாதுகாப்பு அமைச்சரிடம் ஒப்படைக்கப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்ததாகத் தெரியவருகிறது.

(01)

# மட்டக்களப்பு-கொழும்பு ரயிலில் படையினர் தீவிர சோதனை!

மட்டக்களப்பு - கொழும்பு சேவையில் ஈடுபடும் ரயில்கள், தற்போது வாழைச்சேனையில் இருந்து பொலநறுவைக்கு இடைப்பட்ட பகுதியில் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

மட்டக்களப்பு - கொழும்பு சேவையில் ஈடுபட்டுவரும் ரயில்களில் தற்போது பொலிஸாரும், இராணுவத்தினரும் தீவிர சோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர். பயணிகளின் பிரயாணப் பொதிகள் உடைக்கப்பட்டும், அவர்களின் பைகள் திறக்கப்பட்டும் தீவிர சோதனைக்குட்படுத்தப்படுகின்றன.

ரயில்களில் பயணம் செய்யும் இளைஞர்கள், யுவதிகள் விசாரணைக்குட்படுத்தப்படுவதுடன், அவர்களின் பைகள் மிகக் கடுமையாக சோதனையிடப்படுகின்றன. இவ்வாறான தீவிர சோதனை - பொலநறுவையிலிருந்து வாழைச்சேனை வரையான பகுதிகளில் நடைபெறுவதுடன், மட்டக்களப்பிலிருந்து கொழும்புக்குச் செல்லும் ரயில்களே அதிக சோதனைக்குட்படுத்தப்படுகின்றன.

கொழும்புக்கு வெடிபொருட்களும், ஆயுதங்களும் கொண்டு செல்வதைத் தடுப்பதற்காகவே இந்தச் சோதனைகள் நடத்தப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றபோதிலும், படையினரின் இந்தச் செயலால் பொதுமக்கள் பல்வேறு துன்பங்களை அனுபவிக்கின்றனர்.

## புலமைப்பரிசில்...

நடத்தப்பட்டன.

நேற்று முன்தினம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடத்தப்பட்ட புலமைப்பரிசில் கருத்தரங்கில் 2,700 மாணவர்களும், நேற்று பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தில் நடத்தப்பட்ட புலமைப் பரிசில் கருத்தரங்கில் 850 மாணவர்களும், கிளிநொச்சி மத்திய கல்லூரியில் 1,700 மாணவர்களும் பங்குபற்றிப் பயனடைந்தனர்.

யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட கருத்தரங்குக்கு கொமர்ஷல் வங்கி, செலிங்கோ லைஃப் சுன்னாகக் கிளை, டி.எஸ்.ஐ. சுப்பசூஸ், இலங்கை வங்கி, ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம் ஆகியனவும்,

கிளிநொச்சியில் நடைபெற்ற கருத்தரங்குக்கு குமரகுரு புடைவை, அழகுப் பொருள் வாணிபம் என்பன அனுசரணை வழங்கியிருந்தன.

## விடுதலைப் புலி...

தெரிவித்த கண்காணிப்புக் குழு பேச்சாளர் - மேலதிக விபரங் களை வெளியிட மறுத்துவிட்டார்.

இதேவேளை - அரசாங்க தரப்புக்கும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கும் இடையே கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற ஏற்பாடாகியிருந்த கூட்டம், கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் நோர்வே சென்றதால் இரத்துச் செய்யப்பட்டது.

விடுதலைப் புலிகளின் பதில் கிடைக்காதவிடத்து ஹொக்லண்ட் வரும்வரை வேறு சந்திப்புக்கள் எதுவும் அரச தரப்புடன் நடைபெறமாட்டாதென கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் தெரிவித்தார்.

அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடும் விடுதலைப் புலி போராளிகளின் பாதுகாப்புக் குறித்து அரசாங்கம் இதற்கு முன்னர் முன்வைத்த கோரிக்கைகளை விடுதலைப் புலிகள் நிராகரித்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழ் இளைஞர்கள் கைது கொழும்பில் அதிகரிப்பு!

கொழும்பு—

கொழும்பு நகரில் இளைஞர்கள் கைதுசெய் யப்படுவது அண்மையில் அதிகரித்திருப்பதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

தேடுதல்களின்போதும், சந்தேகத்துக்கிடமான நடமாட்டம் என்ற பெயரிலும் தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர் காமரின் வீட்டுக்கு முன்பாக வைத்து தமிழ் இளைஞர்கள் இருவரும், சபாநாயகர் டபிள்யு.டி.எம். லொக்குபண்டாரவின் வீட்டின் அருகே ஒரு தமிழ் இளைஞரும் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகத்துக்கிடமாக நடமாடியதாகக் கூறியே இந்த இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டதாகத் தெரியவருகிறது.

# ஜேர்மனி செயற்பாட்டாளருக்கு நாட்டுபற்றாளர் கௌரவம்!

கிளிநொச்சி—

மாரடைப்பால் கடந்த வியாழக்கிழமை சாவடைந்த ஜேர்மனியைச் சேர்ந்த விஜயரட்ணம் கணேஸ்வரன் நாட்டுப்பற்றாளராக விடுதலைப் புலிகளால் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

1985 ஆம் ஆண்டிலிருந்து புலம்பெயர் மண்ணில் தாயக விடுதலைக்கு வலுச்சேர்க்க விடுதலைப் புலிகளின் ஜேர்மன் பணியகத்துடன் இணைந்து அதன் டுசுல்டோர்வ் நகரச் செயற்பாட்டாளராகவும் பின்னர் 1995 ஆம் ஆண்டிலிருந்து டுசுல்டோர்வ் தமிழாலய நிர்வாகியாகவும் செயற்பட்டு வந்தார்.

எதிர்வரும் புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இவரது உடல் நல்லடக்கம் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் ஜேர்மன் பணியகத்தினர் அறிவித்துள்ளனர்.

# மேலும் ஐந்து சிறுவர்கள் பெற்றோரிடம் ஒப்படைப்பு!

கிளிநொச்சி—

விடுதலைப் புலிகள் அமைப்பில் இணையச் சென்ற 18 வயதுக்குக் குறைந்த 20 பேரில் ஐவர் அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டதுடன், ஏனைய 15 பேரும் பெற்றோருடன் செல்ல மறுத்ததை அடுத்து போரால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் கல்வி அபிவிருத்தி நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

கடந்த வாரம் மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பில் இணையச் சென்ற 18 வயதுக்கு குறைந்த ஐவர் அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அதேபோன்று கிளிநொச்சியிலும் 15 சிறுவர்கள் அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டபோது, அவர்கள் செல்ல மறுத்ததை அடுத்து சிறுவர் நலன்புரி நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

18 வயதுக்கும் குறைந்த 1445 பேரை இதுவரை விடுதலைப் புலிகள் பெற்றோரிடம் நேரடியாகவும், யுனிசெப் மூலமும் கையளித்துள்ளனர்.

## போர்நிறுத்த...

சந்தித்தபோது ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்திருந்தார்.

இந்த உடன்படிக்கையில் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டுமாயின் உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட இருசாராரும் அதனை மேற்கொள்ளுமாறு உத்தியோகபூர்வ மாக வேண்டுகோள் விடுக்கவேண் டுமே தவிர ஒரு தரப்பு மாத்திரம் வேண்டுகோள் விடுப்பது போதுமான தல்ல என்று கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் ஹெலன் ஒலப்ஸ் டோட்ரயர் தெரிவித்தார்.

போர்நிறுத்த உடன்படிக்கையில் மாற்றங்கள் ஏற்படுத்துவதை நிராகரித்த விடுதலைப் புலிகள் - இந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் விடயங்களை முழுமையாக அமுல்படுத்தினாலே போதும் எனத் தெரிவித்திருந்தனர்.


## மரண அறிவித்தல்

### கணபதி நாகமணி

புங்குடுதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 1 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி நாகமணி 31.07.05 இல் காலமாகி விட்டார்.

அன்னார் செல்லமுத்துவின் அன்புக்கணவரும், குணபாலசிங்கம், செல்வராணி, ஜெயபாலசிங்கம், தயபாலசிங்கம், சிவலோகநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 1.08.05 திங்கள் காலை 10 மணிக்கு கேரதீவு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

*தகவல்*
நா.குணபாலசிங்கம்
மகன்

1 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

(சி-2003)


இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 01.08.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.